மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 3 சுற்றம் : 3 மார்ச்சு 2015 ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி விலை : ரூ.10/-



சங்கம் 4
தமிழ்த் திருவிழா

## நான்காம் உலகம் நாடற்றவர்களின் தேசியம்

NEW

# FLAT FOR SALE @ BESANT NAGAR

## 4 - in -one luxury Apartment




Site at :

49, MGR Salai,
**Kalashetr**a Colony,
Besant Nagar,
Chennai.

Suresh & Co.
Engineers & Builders

#22, Ponniamman Koil Street Urur, Adyar, Chennai - 20.

ph:044-24463149
94440 18004
94440 48902

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly March 2015

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம் .ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** பி.ஏ.,
**ஜோசுவா**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**ஜுட்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
V.**கணேஷ்** திருவல்லிக்கேணி
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**
அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

நிதி நிலை அறிக்கை (தலையங்கம்)...... 4

வனங்களின் மூச்சும் வானில் பறந்தவையும் வரலாறே!
ஓசை காளிதாஸ் உரை...... 6

கௌரவ மாற்று (சிறுகதை)
இருங்கோவேள்...... 8

தமீழம் எனும் நெருப்பு
முள்ளிவாய்க்கால் - இன அழிப்பு
பாவலர் காசி ஆனந்தன்...... 11

தன்மானத் தமிழர்களின் தமிழ்மாநில காங்கிரஸ்
ராயபுரம் பி.எம்.பாலா...... 15

அதிக கோடிஸ்வரர்களைக் கொண்ட நாடுகளில்
இந்தியா மூன்றாவது இடம்
வேல் பொன்முடி...... 17

நூத்துக்குச்சி (சிறுகதை)
இருங்கோவேள்...... 18

நான்காம் உலகம்: நாடற்றவர்களின் தேசியம்
ம. ஜெகத் கஸ்பார் உரை...... 21

எல்.ஐ.சி.க்கு அபராதம்
வே.வளையாபதி...... 23

போலி மருத்துவர்கள்
உமாமகேஸ்வரி...... 24

தஞ்சாவூர் கலைத் தட்டு
உமாமகேஸ்வரி...... 25

மீறல்மகள் மருத்துவர் முத்துலெட்சுமி ரெட்டியார்
ஒளிவண்ணன் உரை...... 27

தொடர்கல்வி மதிப்பீடு திட்டம்
மெட்ரிகுலேசன் பள்ளிகளில் அமல்...... 30

மெட்ராஸ்,பம்பாய் நீதிமன்றப் பெயர்கள்
விரைவில் மாற்றம்...... 31

திருக்குறள் மலையாள மொழி பெயர்ப்பு
ஆனந்த்...... 33

குழந்தைகளுக்கு காலைச் சிற்றுண்டி அவசியமா?...... 34

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் “mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



நடுவண்அரசின் நிதிநிலை அறிக்கை வெளி வந்திருக்கிறது. எல்லா ஆண்டுகளைப் போலவே ஆதரவும் எதிர்ப்பும் பொதுமக்களிடையே நிலவுகிறது.

2022ஆம் ஆண்டிற்குள் குடிமக்கள் அனைவருக் கும் வீடு தரப்படும், ஆறு கோடி கழிவறைகள் கட்டி முடிக்கத் திட்டம், கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு நடவடிக்கைகள் ஊக்கப்படுத்தப்படும். எம் பிக்கள், அமைச்சர்கள் மானிய விலையில் எரிவாயு உரு ளைகள் பெறுவதை தானாக முன்வந்து நிறுத்திக் கொள்ள வேண்டும், 2020ஆம் ஆண்டிற்குள் அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து தரப்படும்.

## வாழ்க தமிழ்!

மூத்த குடிமக்கள் மேம்பாட்டு நிதி உருவாக்கப் படும், தகுந்த பள்ளி இறுதி வகுப்புச் சான்றிதழ் இல்லாத சிறுபான்மை இளைஞர்கள் சிறந்த வேலை வாய்ப்பைக் கண்டடைவதற்காக நைமன்சில் என்ற ஒருங்கிணைந்த கல்வி மற்றும் வாழ்வாதாரத் திட்டம் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும். ஆண்டுக்கு ரூ.12 செலுத்தினால் ரூபாய் இரண்டு இலட்சம் விபத்துக் காப்பீடு திட்டம், அடல் பென்சன் யோஜனா என்ற ஓய்வூதியத்திட்டம், ஜீவன் ஜோதி பீமா யோஜனா என்ற திட்டம். இது இயற்கை மற்றும் விபத்துமரண காப்பீட்டுக்குரியது. இது 18 முதல் 50 வயதினருக்கானது. ஆண்டுக்கு ரூ.330 பிரிமியம் செலுத்தினால், ரூ.2 லட்சம் காப்பீடு செய்யப்படும், வறுமைக்கோட்டுக்கு கீழே வாழுகின்ற மூத்த குடிமக்களுக்கு உடலியக்க உதவி சாதனங்கள், வாழ்க்கைக்காக உதவு உபகரணங்கள் வழங்கும் திட்டம், தமிழ்நாடு, பஞ்சாப், இமாச்சலப்பிரதேசம், ஜம்மு காஷ்மீரில் எய்ம்ஸ் மருத்துவமனை, கருப்புப் பணத்தை ஒழிக்க கடுமையான சட்டங்கள், சிகரெட் போன்றவற்றின் விலை உயர்வு என்று நலத் திட்டங்களை அறிவித்திருக்கிறார் அருண் ஜெட்லி.



சிமெண்ட் மீதான உற்பத்தி வரி உயர்வு, தனிநபர் வருமானத்தின் மீதான வரி விதிப்பில் மாற்ற மின்மை, விமானத்தில் பயணம் செய்வதற்க ான சேவை வரி உயர்வு, பொழுதுபோக்கு பூங்காக்கள், தீம் பார்க்குகள், இசை நிகழ்ச்சிகள் சேவை வரியின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பது, இது தவிர பல்வேறு சேவைகளில் சேவை வரி கொண்டு வரப்பட்டும் உயர்த்தப்பட்டும் இருப்பது, என்று பாதகமான அம்சங்களும் இருக்கின்றன.

மக்கள் அதிகமாக எதிர்பார்க்கும் நதிநீர் இணைப்புக்கு ஒதுக்கீடுகள் இல்லை. இன்னும் பல்வேறு இனங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளோ, அறிவிப்புகளோ இல்லை என்கிறார்கள் மக்கள்.

நிதிநிலை அறிக்கையில் வரவேற்கப்பட வேண்டிய அம்சங்களும், இவைகள் சரியில்லை என்கிற அம்சங்களும் இருப்பது என்பது, எந்த அரசு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தாலும் இருப்பதுதான் என்று ஒதுக்கிவிட முடியாது.

பொதுமக்கள் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்தால் மட்டுமே அடுத்தடுத்த ஆண்டுகளில் பொதுமக்களுக்கு நலன் விளைவிக்கும் நிதிநிலை அறிக்கைகள், அரசால் அறிவிக்கப்படும் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் விட தற்போதைய மோடி அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களும், பா ஜ க பாராளுமன்ற உறுப்பினர் களும் மதச்சாயத்தைப் பூசிக்கொண்டு, மற்ற மதத்தினரை புண்படுத்துவதை நிறுத்தி, மதச்சார் பற்ற இந்தியாவிற்கு இடையூறு செய்யாமல் இருக்க வேண்டும்.

◆

---



நேரடி விற்பனை சங்க அமைப்பு சார்பில் விழிப்புணர்வுக் கூட்டம் சென்னை லீ ராயல் மெரிடியன் ஓட்டலில் நடைபெற்றது. இவ்விழாவில் சென்னை உயர்நீதிமன்ற லோக் அதாலத் நீதிபதி டி. என். வள்ளிநாயகம் கலந்து கொண்டு நேரடி விற்பனை விதிமுறை கையேட்டை வெளியிட்டுப் பேசினார்.

ஆந்திர மாநில முன்னாள் டி. ஜி. பி. கோபிநாத் ரெட்டி முன்னாள் மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி எம். புகழேந்தி, நேரடி விற்பனை சங்கத் தலைவர் எ. பி. ரெட்டி நேரடி விற்பனை சங்க சவுத் செயலாளர் மோகன்ராஜ், ஆம்வே இந்தியா முதுநிலை மேலாளர் சிறப்புத் திட்டங்கள் சிவகுமார், சங்கத் துணைத் தலைவர் ராஜிவ் குப்தா, வழக்கறிஞர் திருமூர்த்தி மற்றும் பலர் உடன் உள்ளனர்.

**அரிமா. பாலமுருகன் 90421 35889.**

சங்கம் 4
தமிழ்த் திருவிழா

**ஓசை காளிதாஸ்**
**வனவாசி**

# வனங்களின் மூச்சும் வானில் பறந்தவையும் வரலாறே!

இயல் தமிழுக்கென்று பத்து நாட்கள் திருவிழா எடுப்பது என்பது எவ்வளவு சிரமம் என்பது எனக்குத் தெரியும். அதற்காக நன்றி கூறு கிறேன். இது உணர்வுகளின் வெளிப்பாடு. இந்தியா வில் தண்ணீர் உருவாக்கும் எட்டு இடங்களில் மேற்குத் தொடர்ச்சி மலையும் ஒன்றாகும். மேற்குத் தொடர்ச்சி மலைகளின் மேல் மிகப்பெரிய புல் வெளி காணப்படுகிறது. இவை சோலைக் காடுகள் இந்தப் புல்வெளிகள் அங்குள்ள தாவரங்களுக் கெல்லாம் முன்னோர்.

மலை உச்சியில் மழை பெய்தால் ஸ்பாஞ்சில் தண்ணீரை வைப்பது போல, அந்தப் புல்வெளிகள் மழைநீரை தன்னகத்தே வைத்துக் கொள்ளும். 5, 6 மாதங்கள்வரை வைத்துக்கொள்ளும். அதிலிருந்து தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக கீழிறங்கும்.

பொதுமக்கள் பார்வையில் காடு பயங்கரமானது, அல்லது கேளிக்கைக்குரியது. சோலா ஃபாரஸ்ட் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் சோலைக் காடுகள் மேற்கு மலைத் தொடர்ச்சியில் இருக்கிறது. இங்கே மரங்கள் உயர்ந்து வளர்வதில்லை. அடர்ந்து வளரும். நாம் தரையைப் பார்க்க முடியாது. இலை, தழைகள் தான் கிடக்கும். இமயமலை தோன்றுவ தற்கு பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே மேற்குத் தொடர்ச்சி மலை இருந்ததாக ஆய்வுகள் கூறு கின்றன. மேற்குத்தொடர்ச்சி மலையில் உள்ள மண்ணை ஆராய்ந்ததில் இத்தகவல் பெறப்பட்டது. அந்த மண் எவ்வளவு மழை பெய்தாலும் அடை மழை பெய்தாலும் வெள்ளம் பெருக்கெடுத்தாலும் நீரை உறிஞ்சிக் கொண்டே இருக்கும். இந்த மண் உறிஞ்சிய நீரில் 5 விழுக்காடு மட்டுமே அங்கே வாழும் தாவரங்கள் உணவுக்காக எடுத்துக் கொள் கின்றன. மற்ற நீர் ஓடைகளாக, சிற்றாறுகளாக உருவாகி தாமிரபரணி, வைகை போன்ற நதிகளில் கலக்கின்றன.

நீலகிரி மாவட்டத்தில் 60% காடுகள் உள்ளன. அங்கு வற்றாத ஓடைகள் உண்டு. அவை பவானி கபினி, மோயாறு இவைகளில் கலக்கின்றன.

*மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்*
*காடும் உடையது அரண்.*



சோலைக்காடுகளில்தான் குறிஞ்சிப்பூ பூக்கும். அந்தக் காடுகளை நமது முன்னோர்கள் சேதாரம் செய்யவில்லை. வெள்ளையன் செய்தான். கோயம் புத்தூரில் கலெக்டராக இருந்த வெள்ளையன் காட்டுக்கு சேதம் விளைவித்தான். உதகமண்ட லத்தை ஒட்டகமண்ட் என்றான். அவனது பார்வை யில் கிராஸ் லேண்ட் எல்லாம் வேஸ்ட் லேண்ட் ஆனது. அந்த இடங்களில் யூக்கலிப்டசை நட்டு வைத்தான். மழை நீரை தேக்கிய மண் மாறியது. 4000 ஓடைகள், கூடலூரில் 50 ஆண்டுகளில் வற்றின. முப்பத்தைந்து முதல் ஐம்பது நாட்கள் தமிழகத்தில் மழை பெய்யும்.

ஊட்டி சுற்றுலாத்தலமா? இயற்கைத்தலமா? அங்கே கட்டிடங்கள் பெருகிக் கொண்டிருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலை பல்லுயிர்களின் சுரங்கம். வெள்ளியங்கிரி மலையில் சிவராத்திரி விழா நடத்தப்படுகிறது. இசைக்கச்சேரி அந்த விழாவில் இடம் பெறுகிறது. பறவைகளும் விலங்குகளும் தூங்க முடியாமல் தவிக்கின்றன. குஞ்சுகளுக்கு இறை தேடப்போன தாய்பறவைகள் இந்தச் சத்தத் தால் திரும்பி வரமுடியாமல், குஞ்சுக்கு உணவூட்ட முடியாமல் பயப்படுகின்றன. குஞ்சுகள் சாகின்றன. இப்பகுதியில் உள்ள பறவைகளில் 16 இனங்கள் உலகில் வேறெங்கும் இல்லை. ஆட்டுமலையில் வரையாடுகள் வாழ்கின்றன. நமது தமிழகத்தின் மாநில விலங்கு வரையாடுகள்தான். இது வேறெங்கும் கிடையாது.

நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் நாய்கள் பட்டாசு வெடித்தால் எந்த அளவுக்கு அச்சம் கொண்டு ஓடும் என்பதை நாம் பார்க்கிறோம். அவைகளாலேயே அந்தச் சத்தத்தை தாங்கிகொள்ள இயலாத போது, காடுகளில் வாழும் விலங்குகள், பறவைகள் எப்படி மனிதர்கள் விளைவிக்கும் பல் வேறு வகையான ஒலி மாசுகளைத் தாங்கிக் கொள் ளும்?

காடு புழங்கினால் கெட்டுப்போகும்! வீடு புழங் காமலிருந்தால் கெட்டுப்போகும்! நாம் காட்டுக்குப் போகலாம். ஆனால் அங்கே நம்முடைய எதையும் விட்டுவிட்டு வந்து விடக்கூடாது. நமது பாதச் சுவடுகளை மட்டுமே விட்டு விட்டு வர வேண்டும். குரங்குகளுக்கு நாம் உணவு தருவதால் அவைகளை முதலில் பிச்சைக்காரர்களாக மாற்றுகிறோம். அடுத்து அவைகளைத் திருடர்களாக்கி விடுகிறோம். பழங்களைத் தின்று கொண்டிருந்த அவைகளை நாம், நமது உணவுகளைக் கொடுத்துக் கெடுக் கிறோம். அந்த உணவைத் தேடி நமது வீடுகளில் குரங்குகள் திருட ஆரம்பித்து விடுகின்றன.

ஒருவகை மான் தனது கொம்புகளை உதிர்த்து விடும். பின் அவைகளுக்கு புதிய கொம்பு முளைத்து விடும். விழுந்த கொம்புகளை முள்ளம் பன்றிகள் விரும்பிச் சாப்பிடுகின்றன. இந்த மான்கொம்பில் கால்சியம் அதிகம் இருப்பதால் அதைச் சாப்பிடு கின்ற முள்ளம்பன்றிகளின் முட்கள் வலிமையாக இருக்கின்றன. பட்டமரம் உயிரற்றது தான். ஆனால் அவைகள் காட்டுக்கு உயிர் கொடுக்கின்றன. நாம் காட்டிலிருந்து எதையும் எடுத்து வரக்கூடாது. புகைப்படம், நினைவுகள் இவைகளை மட்டுமே நாம் எடுத்து வரவேண்டும். இதுவரை காட்டிற்குப் போனதே இல்லை என்று சொல்கிறவர்கள் காட்டின் நண்பர்கள்.

சங்க இலக்கியத்தில் ஒரு காட்சி, ஒருவன் காட்டு வழியாகச் செல்கிறான் மாட்டுவண்டியில். மாட்டின் கழுத்தில் மணி கட்டப்பட்டிருக்கிறது. அந்த மணி யின் ஒலி பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் இடையூறாக இருக்கும் என்று அந்த மணியில் உள்ள நாக்கை கட்டுகிறார் அந்தத் தமிழர். தமிழரின் வாழ்வியல் அந்த அளவிற்கு உயர்வானது.

ஆங்கிலத்தில் வல்ச்சர் என்று சொல்லப்படுகிற பறவையை நாம் பிணந்தின்னிக் கழுகு என்று சொல்கிறோம். ஆனால் சங்கத் தமிழில் செஞ்செரு எரிவை என்று நல்ல தமிழ்ப்பெயரால் அது குறிப் பிடப்படுகிறது.

டோடோ என்ற பறவை காணாமல் போய் விட்டது. காரணம் டோடோ மரம் அழிந்ததுதான். அந்த மரத்தின் பழங்களை அந்தப் பறவைகள் மட்டுமே உண்ணும். அதற்கு உணவில்லாது போனதால் டோடோ பறவையினம் அழிந்து போனது. உயிர்ப்பிரமிடு முக்கியம். காட்டில் புலிகள் வாழ்ந்தால் மான்கள் வாழுகின்றன என்று பொருள் கொள்ளலாம். மான்கள் இருந்தால் தாவரங்கள் இருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம். சிரபுஞ்சியில் தண்ணீர்ப்பஞ்சம் இருக்கிறது என்பது விந்தையான செய்தி. அங்கே உள்ள காடுகள் நீரைத் தேக்கி வைக்கும் திறனை இழந்து விட்டன. தமிழகக் காடுகளில் வசிக்கும் பழங்குடி ஒருவரிடம் கேட்டேன். இங்கே இவ்வளவு பூசணிக்காய் விளை வித்திருக்கிறீர்களே, அவைகளை யானைகள் வந்த தின்றுவிடாதா என்று. அதற்கு அவர் சொன்னார். “ராசா வருவாக, அவங்க சாப்பிடுவாங்க, மிச்சம் இருக்கிறதுதான் எங்களுக்கு“ என்றார். காடுகள் வாழ்ந்தால் தான் நாடு வாழும். ◆

சிறுகதை

இருங்கோவேள்



# கௌரவ ஏமாற்று

பத்திரிகைத் துறையில் நான் மிகச்சிறந்தவன் என்று வெங்கடேசன் பிறரிடம் சொல்லிக் கொள் வான். அவனைத் தெரிந்தவர்கள் அவனை ஒரு பொருட்டாகவே நினைக்க மாட்டார்கள்.

ஆனால் தெரியாதவர்களிடம் தன்னை ஒரு அறிவு ஜீவியாகக் காட்டிக் கொள்வான்.

எனக்கு இந்தியத் தலைவர்கள் அனைவரிடமும் பழக்கம் உண்டு. நான் பலருக்கு அவர்கள் மூலம் காரியம் சாதித்துக் கொடுத்திருக்கிறேன் என்பான்.

தனது கதையை கேட்பவர்கள் யார் என்று புரிந்து கொள்வதற்கு முன்பே தனது புருடா வேலை களை ஆரம்பித்து விடுவான். ஏமாந்தவர் களிடம் பணத்தை வாங்கிக் கொண்டு காணாமல் போய் விடுவான்.

புதிதாக ஒரு பத்திரிகை ஒன்றை மாசிலாமணி என்பவர் ஆரம்பிக்கிறார் என்று தெரிந்து கொண்டு அவரிடம் சென்றான் வெங்கடேசன். மாசிலாமணி யைத் தெரிந்த ஓரிருவரின் பெயர்களைச் சொல்லி அவரிடம் அறிமுகமாகி விட்டு தனது சுய புராணத்தை அவிழ்த்துவிட்டான்.

மாசிலாமணிக்கோ மகிழ்ச்சி. ஆகா, நாம் பத்திரிகை ஒன்றை துவக்குகிறோம். இவர் எல்லாம் தெரிந்தவராக இருக்கிறார் இவரை நாம் முழுவதுமாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று முடிவு செய்து கொண்டு, “சார் நீங்க என்னோட இருந்து இந்தப் பத்திரிகையை நடத்துவதற்கு உதவி செய்யுங்க“ என்றார். வெங்கடேசனோ அடுத்ததாக சம்பளம் பேசவேண்டும் இப்போது நாம் இருக்கும் சூழ்நிலைக்கு மாதம் 10 ஆயிரம் ரூபாயாவது அவரிடம் சம்பளமாகப் பெற்றுவிட வேண்டும் என்று முடிவு செய்து விட்டான்.

மாசிலாமணி தொடர்ந்து “நான் இப்பதான் இந்தத் துறையில் காலடி எடுத்து வைக்கிறேன். நீங்க பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தத்துறையில் இருக்கீங்க. உங்களால தான், நான் இந்தத் துறையில முன்னுக்கு வரணும். இப்போதைக்கு மாதத்துக்கு ரூபாய் 15000 தந்துடுறேன். பிறகு பத்திரிகை விற்பனையைப்பொறுத்து சம்பளத்தை அதிகப் படுத்தித் தர்றேன்“ என்றார்.

வெங்கடேசனுக்கு கும்பி குளிர்ந்தது, பத்தாயிரம் எதிர்பார்த்தோம் பதினைந்தாயிரம் கிடைக்கிறதே என்று மகிழ்ந்தான். இருந்தாலும் அதை மாசிலா மணியிடம் காண்பித்துக் கொள்ளாமல். நான் சாதாரணமா நாப்பதாயிரம் வாங்குவேன் சொல்லப் போனா 25 ஆயிரத்துக்குக் கீழே நான் வேலையே செஞ்சதில்லை, என்று பல பெயர் தெரியாத பத்திரிகைகள் பெயரைச் சொல்லி அங்கு 35, அங்கு நாப்பது, அங்கு 30 என்று சொல்லி முடித்துவிட்டு, "நீங்க புதுசா இந்தத் துறைக்கு வந்திருக்கீங்க, தோழராயிட்டீங்க உங்களுக்காக 15 ஆயிரத்துக்கு ஒத்துக்கிறேன்.

ஆனா ஒரு விசயம் மாசம் முடிஞ்சு சம்பளம் எனக்கு சரிப்படாது. இப்பவே முன்பணமா கொடுத்துடுங்க, எங்கே டைப் பண்ணனும், எங்கே டிசைன் பண்ணனும் எங்கே பிரிண்ட் பண்ணனும் எல்லாத்தையும் நான் கவனிச்சுக்கிறேன். நீங்க கவலையே படாதீங்க என்றான். மாசிலாமணியும் இவன் பேச்சை நம்பி 15ஆயிரம் கொடுத்தார். இரண்டு மூன்று இடங்களுக்கு அழைத்துச் சென்றான். அவர்கள் எல்லாம் வேலைக்கான ஊதியத்தைச் சொல்லும் போது, வெங்கடேசன் ஏதாவது கொடுக்க வேண்டுமே என்று கொஞ்சம் சேர்த்தே சொன்னார்கள்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்ட மாசிலாமணி நாளை வருகிறோம் என்று எல்லோரிடமும் சொல்லிவிட்டு வெங்கடேசனையும் அனுப்பி விட்டு, வீடு வந்து சேர்ந்தார். கொஞ்சம் சோர்வாக வீட்டில் அமர்ந்தார். அருகில் வந்த அவரது மனைவி பொய்கை அரசி. "என்ன ஒரு மாதிரியா இருக்கீங்க பத்திரிக்கை வேலை எப்படிப் போகுது" என்று கேட்டார். நடந்ததை எல்லாம் மனைவியிடம் கூறினார் மாசிலாமணி. பொய்கை அரசியோ எங்க அப்பாவுக்கு தெரிஞ்ச ஒருத்தரு பத்திரிகையாளருதான் அவருட்ட நான் கொஞ்சம் கேட்டுப் பாக்கட்டுமாங்க என்றார். சரிம்மா என்றார் மாசிலாமணி.

பொய்கை அரசி அலைபேசியில் அவரிடம் பேசி விபரங்களை கணவரிடம் கூறினாள். மாசிலா மணிக்கு வெங்கடேசன் மேல் சிறிது ஐயம் துளிர்விட்டது.

அடுத்தநாள் வெங்கடேசனிடம் தனக்குத் தெரிந்த ஒருவர் இருக்கிறார் அவரிடம் போய் பேசிவிட்டு நீங்கள் காண்பித்தவர்களில் யாராவது ஒருவரிடம் வேலையைக் கொடுக்கலாம் என்றார்.

எதுக்குங்க டைம் வேஸ்ட் நேத்து நம்ம பாத்த வங்கள்ள குறைவா சொன்னவர்க்கிட்ட வேலையை கொடுத்துடலாமே என்றான் வெங்கடேசன் .

மாசிலாமணியோ போய் பாத்துட்டு வந்துடு வோம் என்று வற்புறுத்தினார். சரி நீங்க போய்ட்டு வாங்க எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு பாத்துட்டு வந்துடுறேன் என்றான். என்ன சார் இப்படிச் சொல்றீங்க உங்களுக்குத் தான் எல்லாம் தெரியும். நீங்க என் பக்கத்துல இருந்தா அவங்க என்னைய ஏமாத்த முற்பட மாட்டாங்க. விவரம் தெரிஞ்ச உங்கள விட்டுட்டு நான் மட்டும் போறது அவ்வளவு சரியா இருக்காதுங்க என்று கூறி வெங்கடேசனை கையோடு அழைத்துக்கொண்டு போனார் மாசிலாமணி.

போன இடத்தில் அமைதியாக இருக்காமல் சுயபுராணம் பாட ஆரம்பித்தான் அந்தப் புராணத்தில் பிறைநிலவன் என்ற பத்திரிக்கை யாளர் பெயரைச் சொல்லி அவருக்கு வாழ்க்கையில் பெரும் பிரச்சனை காவல் நிலையம் வரைபோய் விட்டார். அங்கிருந்து எனக்கு போன் செய்தார். பிறகு நான் காவல் நிலையம் சென்று பிறை நிலவனை காப்பாற்றினேன் என்று அளந்தான்.

கேட்டுக் கொண்டிருந்த பத்திரிகையாளருக்கு பிறைநிலவனைப் பற்றித் தெரியும் அவருக்கு அம்மாதிரிப் பிரச்சினை வந்ததாகத் தெரியவில்லை ஏனென்றால் பிறைநிலவன் அடிக்கடி பேசுபவர், சந்திப்பவர், நம்மிடம் இது பற்றிச் சொல்ல வில் லையே, என்று நினைத்துக் கொண்டு அப்படியா! பிறை நிலவனை உங்களுக்குத் தெரியுமா? அவரது தொலைபேசி எண் கொடுங்கள், அவரிடம் ஒரு கட்டுரை வாங்க வேண்டும் என்றார். வெங்கடேசன் அலைபேசி எண்ணைக் கொடுத் தான். அவர் உடனே அந்த எண்ணுக்கு போன் செய்து உங்களுக்கு வெங்கடேசன் என்பவரைத் தெரியுமா

என்று கேட்க மறுமுனையில் அந்த ஆள் உங்கக்கிட்ட ஏதும் பணம் வாங்கினானா என்று கேட்டார். அதெல்லாம் இல்ல. உங்க வீட்ல ஏதோ பிரச்சனைன்னு, என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே வெங்கடேசன் அந்த அறையை விட்டு நழுவ ஆரம்பித்தான். என் வீட்ல என்ன பிரச்சினை உங்களுக்குத் தெரியாம என்று மறுமுனையில் அவர் கேட்க, இவரோ வெங்கடேசன் சொன்னதைச் சொல்ல, அவரோ, அவன்தான் ஒருத்தர ஏமாத்துன பிரச்சனையில காவல் நிலையத்துல இருந்து போன் பண்ணி எனக்கு உதவி பண்ணுங்கண்ணு சொன்னான். நான் போய் சரிபண்ணிக் கொடுத்தேன் என்றார். சரி நான் அப்புறம் பேசுறேன் என்று கூறிவிட்டு இணைப்பைத் துண்டித்து விட்டு மாசிலாமணி யிடம் "அந்த ஆள் எங்கே" என்றார். வெளியே போனார் என்றார் மாசிலாமணி. "அவர் உங்களிடம் ஏதாவது பணம் வாங்கினாரா?" என்று கேட்டார்.

ஆமாம் நேற்று 15 ஆயிரம் பணம் வாங்கினார் என்றார். "நீங்கள் உடனே சென்று அவரைப் பிடித்து அழைத்து வாருங்கள் அல்லது அவரிடம் கொடுத்த பணத்தைத் திருப்பி வாங்குங்கள் உடனே போங்கள்" என்றார்.


மாசிலாமணி விரைவாக வெளியே வந்தார். வெங்கடேசன் நடந்து போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. வேகமாக நடந்து சென்று வெங்கடேசனைப் பிடித்து. அவர் அழைக்கிறார் வாருங்கள் என்றார். வெங்கடேசனோ நான் எதுக்கு அவருக் கிட்ட வரணும்.

எனக்கு நெறய வேலை இருக்கு நான் போறேன் என்று கிளம்பினார். மாசிலாமணி வெங்கடேசன் கையைப் பிடித்துக் கொண்டார். நான் நேத்துக் கொடுத்த 15 ஆயிரத்தைக் கொடுத்துட்டுப்போங்க என்றதும் என்னிடம் இல்லை என்றவர் கண்ணில் உண்மையான பத்திரிகையாளரும் மாசிலாமணி யின் மாமனாருக்குத் தெரிந்தவருமான அவர் வந்து கொண்டிருப்பது தெரிந்ததும் தனது பர்சிலிருந்து பதினோராயிரம் ரூபாயைக் கொடுத்து விட்டு, விட்டால் போதும் என்று ஓட்டமும் நடையுமாக ஓடிப்போய் விட்டார்.

எண்ணிப்பார்த்த மாசிலாமணிக்கு இதாவது கிடைத்ததே என்றிருந்தது. பத்திரிகையாளர் கேட்டார் "பணத்தை கொடுத்து விட்டானா" என்று. தான் ஏமாந்ததை அவரிடம் காட்டிக் கொள்ள விரும்பாத மாசிலாமணி கொடுத்து விட்டார் என்று கூறினார். "அவன் ஏமாற்றுப் பேர்வழியாம் நல்ல வேளை தப்பித்தீர்கள். சரி வாருங்கள் உங்களுக்கு என்ன வேண்டும் என்பதைச் சொல்லுங் கள்" என்று கூறிக்கொண்டே அவர் அறையை அடைந்தனர்.

மாசிலாமணியின் தேவைக்கு நியாயமான ஆட்களை அவர் அறிமுகப்படுத்தி வைத்தார். மனைவியை நினைத்து மகிழ்வுடன் மாசிலாமணி இல்லம் வந்து சேர்ந்தார். ◆

---



**க**ண்கள்
என்ற கருவி
கடவுள் தந்த
வெகுமதி
கருப்பும்
வெள்ளையும்
ஒன்றென்று ஓதும்
கடவுளின்
அறநெறி

எண்சாண்
உடம்புக்கு
தலையே பிரதானம்
தலைக்கு
தன்னிகரில்லா
கண்களே
பிரதானம்
கண்களால் பெற்ற
கல்வி
காலத்தாலும்
அழியாது
கண்ட காட்சிகள்
கற்பனைகளை
விரிக்கும்.



**காட்டான்**



தமிழீழப் பாவேந்தர் காசிஆனந்தன்




4

# முள்ளி வாய்க்கால் - இன அழிப்பு

1948இல் வெள்ளைக்காரன் இலங்கையை விட்டு வெளியேறியதும் சிங்கள அரசு தமிழீழத்தில் திட்டமிட்ட சிங்களர் குடியேற்றத்தைத் தொடங்கிய போதே தமிழ்த் தேசிய இன அழிப்பு நடவடிக்கையும் தொடங்கிற்று.

1956 தமிழீழத்தில் இனப் படுகொலை தொடங்கிய ஆண்டாகும்.

2009 முள்ளிவாய்க்கால் வரை 61 ஆண்டுகள் இன அழிப்பும் 53 ஆண்டுகள் இனப்படு கொலையும் புயல் வீச்சில் இடம் பெற்றுள்ளன.

முள்ளிவாய்க்காலை ஒரு தனி நிகழ்வாகப் பார்ப்பது முழுப்பூசணிக்காயைச் சோற்றுக்குள் புதைக்கும் முயற்சியேயாகும்.

ஓர் இன அழிப்பு நடவடிக்கையின் தொடர்ச்சியே முள்ளிவாய்க்கால் என்பதை உலகம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

'முள்ளிவாய்க்காலில்' ஒன்றரை இலட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டதாகச் சொல்கிறார்கள் முள்ளிவாய்க்காலுக்கு முன்பும் ஒன்றரை இலட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்னும் உண்மையை மூடி மறைக்காதீர்கள்.

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இன அழிப்பு நடவடிக்கையை வெறும் போர்க்குற்றம் என்றே உலக நாடுகள் மா மன்றத்தின் ஆய்வறிக்கை கூறுகிறது. ஒரு வன்கொடுமை (பயங்கரவாத) இயக்கத்தை அழிக்க அரசு மேற்கொண்ட முயற்சியாம் நடவடிக்கையாம் அது. இன அழிப்பு என்பதற்கு அதில் இடமே இல்லையாம். எனவே

தான் உலகநாடுகள் மாமன்ற ஆய்வறிக்கையில் எந்த இடத்திலுமே இன அழிப்பு என்ற சொல் இடம் பெறவில்லை என்கிறார்கள்.

அரசுப் படையும் புலிப்படையும் போர்க்குற்றம் புரிந்ததாக அறிக்கை கூறுகிறது.

இன அழிப்பு செய்ய ஆயுதம் எடுத்தவனையும் இன அழிப்பு செய்தவனை எதிர்த்து ஆயுதம் எடுத்தவனையும் ஒரே நிறைகோலின் சமநிலைத் தட்டுகளில் இடுகிறது ஆய்வறிக்கை.

முள்ளிவாய்க்காலிலும் சரி முள்ளிவாய்க் காலுக்கு முன்பும் சரி தமிழர்கள்தானே சிங்கள இன வெறியர்களால் கொல்லப்பட்டார்கள் இது முழுமையான இன அழிப்பு நடவடிக்கையா? இல்லையா?

முள்ளிவாய்க்கால் இன அழிப்பை இன்னொரு விதமாக மூடிமறைக்க முயல்கிறது உலகநாடுகள் மாமன்றத்தின் மாந்த உரிமை ஆணையம்.

சிங்கள இனவெறி அரசின் இக் கொடிய இன அழிப்பு நடவடிக்கையை மாந்த உரிமை ஆணையம் வெறும் மாந்த உரிமை மீறல் என்று சிறுமைப்படுத்துகிறது.

இலங்கையில் இரண்டு மாந்தர்கள் இருக்கிறார்கள் சிங்கள மாந்தன் இருக்கிறான் தமிழ் மாந்தன் இருக்கிறான் இவர்களில் எந்த எந்த மாந்தனின் உரிமை மீறப்பட்டது?

மாந்த உரிமைகளில் மிக உயர்வான உரிமை உயிர்வாழும் உரிமை என்று உலக மாந்த உரிமைகள் பேரறிவித்தல் மாந்த உயிரின் மாண்பினை வலியுறுத்துகிறது.

முள்ளிவாய்க்காலில் சிங்களப் படை வெறியர்கள் கொன்று குவித்தது தமிழ் மாந்த உயிர்களையா? இல்லையா? முள்ளிவாய்க்காலில் நடந்து முடிந்தது முழுமையான இன அழிப்பு நடவடிக்கையா? இல்லையா?

இலங்கையில் தமிழர்களின் மாந்த உரிமைகள் பறிக்கப்படுவது மாந்தர்களின் உரிமைகள் என்பதால் அல்ல தமிழர்களின் உரிமைகள் என்பதால் என்னும் உண்மையை இன்னும் இன்னும் உலகம் ஏற்க மறுப்பது ஏன்?

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட ஒன்றரை இலட்சம் தமிழ் உயிர்களின் படுகொலையும் போர்க்குற்றம் என்றால் முள்ளிவாய்க்காலுக்கு முன் தமிழீழத்தில் கொல்லப்பட்ட ஒன்றரை இலட்சம் தமிழ் உயிர்களின் படுகொலை என்ன குற்றம்?

முள்ளிவாய்க்காலுக்கு முன்பு நிகழ்ந்து முடிந்தவை என்ன? முள்ளிவாய்க்காலுக்குப் பின்பு நிகழ்ந்து கொண்டிருப்பவை என்ன?

இன்றுமுள்ளிவாய்க்காலின் பின்பு கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தமிழீழ மண்ணில் சிங்களர் குடியேற்றம் முடுக்கிவிடப்பட்டிருக்கிறதே சிங்களப் படைவெறியர்களின் கொடிய பாலியல் வன்கொடுமைக்குத் தமிழ்ப்பெண்கள் இரையாகிக் கொண்டிருக்கிறார்களே தமிழர்கள் வெள்ளை வண்டிகளில் கடத்தப்பட்டுக் காணாமல் போகிறார்களே கப்பல் கப்பலாகத் தமிழ் மக்கள் ஏதிலிகளாக வெளிநாடுகளுக்கு ஓடுகிறார்களே இவை அனைத்தும் போர்க்குற்றமா? மாந்த உரிமை மீறலா? இல்லை இன அழிப்பு நடவடிக்கையா?

முள்ளிவாய்க்காலுக்கு முன்னும் பின்னுமான பின்னணியில் முள்ளிவாய்க்காலை எடைபோட உலகம் முன்வரவேண்டும்.

போர்க்குற்றமும் மாந்த உரிமை மீறலும்தான் முள்ளிவாய்க்கால் என்றால் போர்க்குற்றத்துக்கும் மாந்த உரிமை மீறலுக்கும் தண்டனை வழங்கப்படுவதோடு போர்க் குற்றத்துக்கும் மாந்த உரிமை மீறலுக்குமான தீர்வு முடிந்துவிடும்.

இனவெறிக் கொலைஞன் மகிந்த ராஜபக்ச குற்றவாளி ஆக்கப்பட்டு சிறைத்தண்டனை பெற்றால் எல்லாம் முடிந்து விட்டதா? இன்னொரு இனவெறிக் கொலைஞன் மகிந்த ராஜபக்சவை விடக் கூடுதலான இனவெறியன் குடியரசுத் தலைவனாக அரசிருக்கையில் உட்கார மாட்டானா?

போர்க்குற்றத்தையும் மாந்த உரிமை மீறலையும் வைத்துச் சிங்கள இனவெறியர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் பொருளற்றதாய்ப் போய்விடும்.

*இன அழிப்புக்கு எதிரான நடவடிக்கையில் உலகம் இறங்க வேண்டும்.*

*போர் என்ன? எப்படி நடந்தது? என்று ஆய்வதை விடுத்து தொடர்ந்து தமிழீழத்தில் நடந்துகொண்டிருக்கும் தமிழ்த் தேசிய இன அழிப்பின் வேர் என்ன? விதை என்ன? என்று உலகநாடுகள் மாமன்றம் ஆய்வு செய்தல் வேண்டும்.*

*இன அழிப்பை உலகம் ஒப்புக்கொள்ள வைப்பதன் மூலமே தனித்தமிழ் ஈழம் என்னும் இலக்கை நாம் அடைய முடியும்.*

*பிரபாகரன் அவர்களின் எந்தப் போர் நகர்வும் எந்தக் காலத்திலும் பிழைத்ததில்லை.*

*சிங்கள இனவெறி அரசு இருபது நாடுகளின் துணையோடு முள்ளிவாய்க்காலில் பெற்ற வெற்றி இன்று உலக நாடுகள் மாமன்ற முற்றத்தில் நொறுங்கிச் சிதறுகிறது.*

*பிரபாகரன் அவர்களின் திட்டமிட்ட நகர்வே முள்ளிவாய்க்கால் என்பது இப்போது பிறரால் உணரப்படுகிறது.*

*முள்ளிவாய்க்காலில் பிரபாகரனால் சிங்கள இனவெறியனின் முகமூடி கிழித்தெறியப்பட்டது*

*தமிழீழ மக்கள் முள்ளிவாய்க்காலைக் காப்பாற்றப் போராடினார்கள். இன்று முள்ளி வாய்க்கால் தமிழீழ மக்களைக் காப்பாற்றப் போராடுகிறது.*

*உயிர்மூச்சோடு தொடர்ந்து தமிழீழ விடுதலைக்காகப் போராடும் நிலையான போர்க்களமாக முள்ளிவாய்க்கால் உறுமி நிற்கிறது.*

*எத்தனை விடுதலைப் புலிகளின் படைத்தலைவர்கள் விழிமூடிய போர்க்களம் எத்தனை கரும்புலிகள் உடல் எரிய தீக்குளித்த போர்க்களம் எத்தனை நாட்டுப்பற்றாளர்கள் எதிரிகளின் குண்டுகளுக்கு இரையான போர்க்களம்.*

*முள்ளிவாய்க்கால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முடிவைக் கொண்டுவந்த போர்க்களம் என்கிறார்கள் இல்லை தமிழர் வாழ்வில் விடிவைக் கொண்டு வந்த போர்க்களம்.*

◆

# கற்பின் செல்வி!

**பாவலர். சீனி. சுந்தரமூர்த்தி**

எம்.ஏ., எம்.ஏ., எம்.எட்.

தமிழிலக்கிய வரலாற்றில் கணிகை மரபுத்
தமிழ்மகளைக் காப்பியத்தின் தலைவி யாக்கித்
தமிழ்வாழவும் இனம்வாழவும் பெரும் புரட்சித்
தழைத்தோங்கச் செய்திட்டாரே! சாத்த னாரே!
நிமிர்ந்தே சீர் திருத்தங்களைச் செய்து வட்ட
நிலாபோல ஒளிவிடும் சலவைக் கல்லாய்த்
தமிழ் நாடிது! திருநாளிது! விரைந்து எழுந்து
தமிழ்மக்கள் பேரின்பம் காணச் செய்தார்!

“கவிச்சீத்தலைச் சாத்தனார்” படைத்து அளித்த
காவியமரம் “மணிமேகலை” யில்சாது வனார்
புவியெங்கும் குடிப்பழக்கம் விட்டொ ழிக்கப்
புதுப்பாதைக் காட்டிட்டார்! புதுமைக் கண்டார்!
பாவிகள்செய் யும்தவறினை உணர்ந்து திருந்திப்
பண்புள்ளம் கொண்டுவாழ முடியு மென்ற
கவின்கலையாய் நம்பிக்கையை எழுப்பி வீட்டில்
காலமெ(ல்)லாம் வளம்பெருக வழிகையக் கண்டார்!

குடிமக்கள் துயரில்லா வாழ்வு வாழ
கூடியமர்ந்து புன்னகையில் மூழ்கி நாளும்
பிடிப்போடு உணவருந்திப் பொழுது போக்கப்
புத்தாடை மகிழ்வோடு உடுத்திக் கொண்டு
ஆடியதேன் அறவாழ்க்கைத் தேடிய தேனோ?
ஆழ்க்கடலைத் தாண்டிக்காழ் பொருள் ஈட்டி
ஓடியஓட் டம்குறைய கல்லில் உறங்கி
ஒன்றசேர வகைச்செய்தான் “புண்ணிய ராசன்!”

அறிவார்ந்த “ஆபுத்திரன்” “அமுத சுரபி
அருமைமிகு விடைத்திங்கள் முழுநி லவில்
பேரருவி வளம்வந்து பெற்ற “மணியே!”
பெருமைசால் தமிழர்களின் பசியைப் போக்கி
அறப்பணியைச் செய்திட்டாளே!” கற்பின் செல்வி!”
“ஆபுத்திரன்” சாதியாவும் வெறுத்து ஒதுக்கி
அறவழியில் மகிழ்வோடு வாழ்வது சிறப்பு
அமுதமாய் இனிப்பதும் நலமே என்றார்!

# அந்தநாளும் வந்திடாதோ?

கல்வியென்றால் சிலருக்கு மட்டும் என்றே
கருணையின்றி நினைக்கின்றார் பலரு மிங்கே
எல்லோரும் இந்நாட்டில் கல்வி கற்கும்
ஏற்றமிகு காலமின்னும் வரவே இல்லை
பொல்லாரின் பணம்சேர்க்கும் கூட மாகப்
பொலிகிறதே கல்விநிலை யங்கள் இன்று
எல்லோரும் எக்கல்வி யும்கற் கின்ற
இனிமைமிகு அந்தநாளும் வந்தி டாதோ?

குடியாட்சிப் பயனெல்லாம் அனைவ ருக்கும்
குறைவின்றிக் கிடைக்கவில்லை இந்த நாட்டில்
தடியர்கள் உடல்பலத்தால் நாட்டை ஆளும்
தவறுகளைக் காணுகின்றோம் வருத்த மின்றி
குடியர்கள் பணமிருந்தால் வெற்றி சூடிக்
குறையுடனே ஆண்டிடவும் முடியும் நாட்டை
படிப்பிலுயர் பண்பாளர் ஆட்சி செய்தல்
பார்க்கின்ற அந்தநாளும் வந்தி டாதோ?

நீதியிங்கே ஏழைகட்கே எட்டா தாகி
நிதிபடைத்தோர் வெல்கின்ற காட்சி இங்கே
நீதிபதி கள்நியம னத்தில் ஊழல்
நேர்வதையும் நாமிங்கே காணு கின்றோம்
மேதினியை ஆள்வோர்க்கு நெருக்க மானோர்
மிகநல்ல தீர்ப்பினையும் பெறலாம் இங்கே
நீதியென்றால் அனைவருக்கும் கிடைக்கு மென்ற
நெஞ்சமகிழ் அந்தநாளும் வந்தி டாதோ?

காவல்நி லையங்கள் நாட்டை ஆளும்
கட்சிக்காய் என்பதுபோல் இருத்தல் கண்டோம்
காவலரைத் தாக்குகின்ற வெறியர் கூடக்
களிப்புடனே சுற்றிடலாம் பணமி ருந்தால்
பாவமில்லை ஏழைகளைப் பொய்வ ழக்கில்
பயன்படுத்திப் பணம்பறித்தல் எனும்நி லையே
காவலரும் தீயவரை தண்டிக் கின்ற
கடமைசெய்யும் அந்தநாளும் வந்தி டாதோ?

கவிஞர் இராம. பரஞ்சோதி
பொழிச்சலூர்



# தன்மானத் தமிழர்களின்
# தமிழ் மாநில காங்கிரஸ்!

சுதந்திரப் போராட்டத்தில் முன்னின்ற இயக்கம் என்ற மிகப்பெரிய தகுதியோடு பல ஆண்டுகாலம் இந்தியாவை ஆண்ட இயக்கம் காங்கிரஸ். படிப்படி யாக செல்வாக்குக் குறைந்து எதிர்க்கட்சி என்ற தகுதி கூட கிடைக்காமல் இன்று திக்கித் திணறு கிறது என்றால், அதற்கு முக்கியக் காரணம் மாநிலங் களில் உள்ள தலைவர்களை, மாநிலச் சூழல்களை, மாநில மக்களை மனதில் கொள்ளாமல் எடுக்கப் பட்ட முடிவுகள் தான் பின்னடைவுக்கு காரண மாகிப் போய்விட்டன.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஐயா மூப்பனார் அவர்கள் காங்கிரஸ் பேரியக்கத்தின் வலிமையான தூணாகவும் அப்பழுக்கற்ற அரசியல்வாதியாகவும் விளங்கினார். மாநிலத்திற்குத் தேவையான முடிவுகளை எடுக்கும் சுதந்திர மனிதராக வலம் வந்தார். சரியான நேரங்களில் மிகச் சரியான முடிவு களை எடுத்து, தமிழகத்தில் காங்கிரஸ் என்ற கட்சிக்காரர்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கினார்.

கட்சியின் மேலிடம் தனது ஆலோசனைகளை எடுத்துக் கொள்ளவில்லை என்ற நேரத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் என்ற கட்சியை உருவாக்கினார். வென்றார். அரசியலுக்கே வரமாட்டேன் என்று சொன்ன உச்ச நடிகர், ஐயா மூப்பனாருக்கு ஆதரவாகப் பேசினார். இந்திய நாட்டின் தலைமை அமைச்சராகும் நல்வேளை வந்தபோது, சிலரின் கழுத்தருப்பு வேலைகளால் அந்தப் பதவி தமிழனுக்கு கிடைக்காமல் போனது. என்றாலும் அவரது சேவை தொடர்ந்து கொண்டே இருந்தது. பிறகு ஒரு சூழலில் காங்கிரசுடன் இணைய வேண்டிய அவசியம் வந்தது. திரு. வாசன் அவர்களது செல்வாக்கை தலைமை பயன்படுத்திக் கொண்டது. காலப்போக்கில் அவரது செல்வாக்கைக் குறைக்க, டெல்லித் தலைமை பல்வேறு தகிடுதத்த வேலைகளில் இறங்க ஆரம்பித்தது. இது தெரிந்தும் பொறுமை காத்த திரு. ஜி. கே. வாசன் அவர்கள், தாங்க இயலா ஒரு நிலை வந்தபோதுதான் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியை மலரச் செய்தார்.

கட்சியின் தலைவராக இருந்தபோதும் அமைச்சராக இருந்தபோதும் எந்தவித கெட்ட பெயரும் இல்லாத ஒரே அரசியல்வாதியாக திரு. ஜி. கே. வாசன்





திகழ்ந்தார். அந்த நற்பெயர் அவருக்கு தமிழக மக்களிடையே பெரும் மதிப்பையும் நம்பகத்தன்மையையும் ஏற்படுத்தியிருக்கின்றன. பொதுமக்களின் நலனுக்காக திட்டங்கள், சட்டங்கள் ஏற்பட காரணமாக இருந்ததோடு, மற்றவர்கள் எடுக்கும் நல்ல திட்டங்களுக்கும் ஆதரவு தந்து கொண்டிருக்கிறார். அதே நேரத்தில் பொதுமக்களைப் பாதிக்கும் எந்தச் செயல்பாடுகளையும் அனுமதிப்பதே இல்லை. அதற்காக முதலில் குரல் கொடுப்பவராகவும் திரு. ஜி. கே. வாசன் அவர்கள் செயலாற்றி வருகிறார். கடந்த மூன்றாம் தேதி அவர் அரசை வலியுறுத்தி ஒரு அறிக்கையையும் வெளியிட்டார்.

கைத்தறி நெசவாளர்கள் தொழில் தங்கு தடையின்றி வளர, தொழிலாளர் நலன் காத்திட மத்திய மாநில அரசுகள் உரிய செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். கைத்தறி ஜவுளிகள் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

அப்படி வரும் ஜவுளிகளுக்கு அரசு மானியம் சாதாரண காலங்களில் 20 சதவீதமும் விஷேச காலங்களில் 30 சதவீதமாகவும் வழங்கப்பட்டு வருகிறது. அதாவது, சாதாரண காலங்களில் ரூ.100ம் விசேச காலங்களில் ரூ.150ம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த மானியச் சலுகை சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது. கச்சாப் பொருட்கள் விலை, கூலி உயர்வு மற்றும் அகவிலைப்படி உயர்வு போன்ற காரணங்களினால் ஜவுளிகளில் விலையும் பல மடங்கு அதிகரித்துள்ளது. எனவே உச்ச வரம்பை ரூ 100 இருந்து ரூ. 500 ஆக அரசு மானியமாக உயர்த்த வேண்டும் அல்லது உச்சவரம்பு என்பதைத் தவிர்த்து விற்பனை செய்யப்படும் ஜவுளிகளின் தொகைக்கு முழு மானியம் கிடைப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்பதுதான் அந்த அறிக்கை.

இன்றைய தமிழக அரசியல் சூழலில் திரு. ஜி.கேவாசன் அவர்கள் பொறுப்புள்ள ஒரு அரசியல் வாதியாக மிளிர்கிறார். தொண்டர்கள் எளிதில் அணுகக்கூடிய இளைய தலைவர்களில் முதல்வராகத் திகழ்கிறார் என்பது அனைத்துக் கட்சியினருக்கும் தெரிந்த ஒன்று. யார் யாரோ முதல்வர் என்று பேசிக்கொண்டிருக்கும் தமிழகத்தில் எல்லாத் தகுதியும் படைத்த திரு. ஜி. கே. வாசன் அவர்கள் தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்றால் தமிழகத்தின் எதிர்காலம் ஒரு புதிய விடியலை காணும் என்பதுதான் பொதுமக்களின் விருப்பமாக இருக்கிறது.

**ராயபுரம் பி. எம். பாலா.**

## இலங்கை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த ஸ்ரீபவன்



இலங்கை உச்சநீதிமன்றத்தின் 44வது தலைமை நீதிபதியாக தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த ஸ்ரீபவன் (63) பதவியேற்றார்.

ராஜபக்சேவுக்கு எதிரான வழக்கு ஒன்றில் அவருக்குப் பாதகமாக தீர்ப்பு அளித்ததால் கடந்த 2013ஆம் ஆண்டு சொத்துக்கணக்கை சரியாகக் காண்பிக்கவில்லை என குற்றம்சாட்டி உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஷிரானி பண்டாரநாயக்காவை ராஜ பக்சே தனது அதிகாரத்தை பயன்படுத்தி பதவி நீக்கம் செய்தார்.

அவருக்கு மிகவும் நெருக்கமான மோகன் பெரிஸ் என்பவரை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக ராஜ பக்சே நியமித்தார். ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை யடுத்து, கண்ணியமாக தலைமை நீதிபதி பதவியை விட்டு விலகும்படி மோகன் பெரிஸ்க்கு புதிய அதிபர் மைத்ரி பாலா சிறிசேனா கடிதம் எழுதி இருந்தார். மோகன் பெரிஸ் உடனடியாக பதவி விலக வேண்டும் என உச்சநீதிமன்ற வழக்கறிஞர்களும் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இதன் எதிரொலியாக உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக மீண்டும் நியமிக்கப்பட்ட ஷிரானி பண்டார நாயக்கா உச்சநீதிமன்றத்துக்கு வந்து பதவி ஏற்றார். அவருக்கு ஏராளமான வக்கீல்களும், நீதிபதிகளும் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

பதவியேற்ற ஒரேநாளில் அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார். இதனையடுத்து, தலைமை நீதிபதி பதவி காலியாக இருந்தது. இந்நிலையில், இலங்கை உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக ஸ்ரீபவன் (63) அதிபர் மைத்ரிபாலா சிறிசேனா முன்னிலையில் பதவி யேற்றார்.

இலங்கை உச்சநீதிமன்றத்தின் 44 வது தலைமை நீதிபதியாக பதவியேற்றுள்ள ஸ்ரீபவன் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**- சாதிக்**

# அதிக கோடீஸ்வரர்களை கொண்ட நாடுகளில் இந்தியா மூன்றாவது இடம்

அதிக எண்ணிக்கையில் கோடீஸ்வரர்களை கொண்ட நாடுகளில், ரஷ்யா, இங்கிலாந்தை பின்னுக்கு தள்ளி இந்தியா மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. இந்திய பெரும் பணக்காரர் களில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் முகேஷ் அம்பானி முதல் இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சீன ஹூரன் ரிப்போர்ட் பத்திரிகையின் உலக பணக்காரர்கள் பட்டியலில் பில் கேட்ஸ் முதலிடத் தில் உள்ளார். இந்த பட்டியலில் குறைந்தபட்சம் ரூ.6,000 கோடி சொத்துடன் உள்ள இந்திய கோடீஸ்வரர்கள் பலர் இடம் பெற்றுள்ளனர்.

இதில் முகேஷ் அம்பானி ரூ.1.20 லட்சம் கோடி சொத்துடன் முதல் இடத்தைப் பிடித்துள்ளார். சன் பார்மா உரிமையாளர் திலீப் சாங்வி ரூ.1.02 லட்சம் கோடி சொத்து மதிப்புடன் இரண்டாவது இடத்திலும், டாட்டா சன்ஸ் பலோன்ஜி மிஸ்திரி மற்றும் குடும்பத்தினர் ரூ.96,000 கோடி சொத்துடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

இந்தியக் கோடீஸ்வரர்கள் பட்டியலில் அதிக கோடீஸ்வரர்களுடன் நம் நாடு மூன்றாவது இடத்தைப் பிடித்திருப்பது இதுவே முதல் முறை. ஹூரன் ஆய்வின்படி உலகில் உள்ள 2,089 பெரும் பணககாரர்களில் 97 பேர் இந்தியாவில் உள்ளனர். இந்தப் பட்டியலில் அமெரிக்கா முதல் இடத்திலும், சீனா இரண்டாவது இடத்திலும் உள்ளன.

இந்தியாவின் டாப் 10 கோடீஸ்வரர்களில் விப்ரோவின் அசிம் பிரேம்ஜி (ரூ.84,000 கோடி). எச்.சி.எல். டெக்னாலஜிஸ் ஷிவ் நாடார் (ரூ.66,000 கோடி) ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். 97 இந்திய கோடீஸ்வரர்களில் 41 பேர் பரம்பரை பணக் காரர்கள் என்பதும், 56 பேர் சுயமுயற்சியால் கோடீஸ்வரர்கள் ஆனவர்கள் என்பதும் ஹூரன் ஆய்வறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

பயோகான் நிறுவன உரிமையாளர் கிரண் மசூம்தார் ஷா மட்டுமே சுயமாக முன்னேறிய பெண் கோடீஸ்வரர் ஆவார். இவரது சொத்து மதிப்பு ரூ.6,000 கோடி ஆகும். இந்திய பெண் கோடீஸ்வரர்களில் ரூ.16,200 கோடி சொத்து மதிப்புடன் சாவித்திரி ஜிந்தால் முதல் இடத்தில் உள்ளார். அடுத்து பென்னட் கோல்மன் நிறுவனத் தின் இந்து ஜெயின் (ரூ.15,000 கோடி) உள்ளார்.

**வேல்பொன்முடி**



## சிறுகதை

# நூத்துக்குச்சி

**இருங்கோவேள்**

விழாமைந்தனின் தந்தை ஒரு நல்ல விவசாயி, நாட்டு நடப்புகள் தெரிந்தவர். அவர் தனது இரு மகள்களையும் மகனையும் வளர்க்க பெரும் பாடுபட்டார். அவருக்கு குறைவான நிலமே இருந்தது. ஒரு குடும்பம் ஓராண்டுக்கு சாப்பிடு வதற்கான விளைச்சலை மட்டுமே தரமுடியும் என்ற நிலையில்தான் நிலங்கள் இருந்தன. விழா மைந்தனின் தந்தையோ, தனக்குத் தெரிந்ததை வைத்து, பிற தொழில்கள் மூலம் சிறிது சம்பாதித்தார். மகள் இருவரது திருமணங்களுக் காகவும், மகனின் படிப்பிற்காகவும், நிலம், வீட்டை விற்றார். உறவினர் ஒருவரது வீட்டில், அவர்கள் வாடகை வேண்டாம் என்று சொல்லியும் கூட, அவ்வூரில் உள்ள அந்த வீட்டுக்கு எவ்வளவு வாடகை கொடுக்க வேண்டுமோ அந்த வாடகையை நியாயமாகக் கொடுத்து, அவரது இறுதிக்காலம் வரை வாழ்ந்தார். அவரது ஏழ்மை என்பது அவரது வாழ்நாளைக் குறைத்து விட்டது.

விழாமைந்தனின் திருமணத்திற்கு முன்பதாகவே அவர் இறந்து போனார். அவருக்கு முன்பதாகவே அவருடைய துணைவியார் தவறிவிட்டார். அதற்கு இரு காரணங்கள். ஒன்று ஏழ்மை மற்றொன்று கணவன் மீதும் பிள்ளைகள் மீது அவர் வைத்திருந்த பேரன்பு. இவைதான் அவரை கணவனுக்கு முன்ப தாகவே சுமங்கலியாக மேலுலகம் கொண்டு போய்ச் சேர்த்து, தனக்கு இல்லாவிட்டாலும் தன்னை வருத்திக் கொண்டு கணவருக்காகவும் பிள்ளை களுக்காகவும் செய்ததின் காரணமாகவும் உழைத்ததின் காரணமாகவும் சீக்கிரமே போய்ச்சேர்ந்தாள்.

தந்தையார் இறந்தபின்பு ஊருக்குப் போவதையே நிறுத்திவிட்டான் விழாமைந்தன். ஊருக்குச் சென்றால் பெற்றோர் நினைவுகள் அவனைத் துன்பப்படுத்தும். எனக்காக என் பெற்றோர் இளம் வயதிலேயே



இறந்துவிட்டார்களே என்று அவனுடைய மனசாட்சி அவனை வருத்திக் கொண்டே இருக்கும். உறவுப்பெண்ணைத் தான் திருமணம் செய்தான். அவள் பக்கத்து ஊரைச் சேர்ந்தவள் தான். அவளை திருமணம் செய்து கொடுத்த கையோடு அவளது பெற்றோர் அவளது தம்பியுடன் மதுரை நகரிலே குடியேறி விட்டனர். ஊருக்குப் போகும் கட்டாயம் இல்லாமல் போனது விழா மைந்தனுக்கு. ஊர் நினைவுகள் மட்டும் அடிக்கடி அவனுக்கு வந்து விடும்.

ஐந்து வகுப்புவரை தான் ஊரில் படித்தான். அதன்பிறகு நகரில் உள்ள விடுதியில் தங்கித்தான் படித்தான். அதன்மூலம் அவன் உயர்ந்த இடத்திற்கு வந்து விட்டான் என்றாலும் பெற்றோரையும் ஊரையும் இழந்தது என்பது அவனுக்குள் ஆறாத காயமாகவே இருந்தது. அந்தக் காயத்திற்கு அடிக்கடி மருந்திட்டாள் மனைவி முகவைச் செல்வி.

பிள்ளைகள் படித்துக் கொண்டு இருக்கிறார்கள் அவர்களது உயர் கல்விப்படிப்புகளுக்கான செலவுகளைச் சமாளிக்கப் போதுமான சேமிப்பை வங்கியில் வைத்திருந்தான். பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்ற ஒரு வாழ்வை வாழ்ந்தான் என்ற போதிலும் ஊர் நினைவுகள் அவன் உள்ளத்தில் குடைந்து கொண்டிருந்தது. அப்படிப்பட்ட நினைவுகளில் ஒன்றுதான் நூத்துக்குச்சி விளை யாட்டு.

இந்த விளையாட்டை விழாமைந்தன் விளையாடியதே இல்லை. ஆனால் பார்த்தி ருக்கிறான் சரியாக ஞாபகம் இல்லை. அதைத் தெரிந்து கொண்டு தனது பிள்ளைகளுடன் விளையாட வேண்டும் என்று அவனுக்கு அளவில்லாத ஆர்வம்.

அன்று மாலை ஏழு மணியைப்போல் வீடு திரும்பிய விழாமைந்தன் முகவைச் செல்வியிடம் “ஏதாவது குடிக்கக் கொடு செல்வி“ என்று கேட்டான். அவன் கேட்டு வாய் மூடுவதற்குள் சிறுபருப்பில் தேங்காய் போட்டு செய்யப்பட்ட பாயசத்தைக் கொண்டு வந்து கொடுத்தாள். அதை வாங்கிக் குடித்தவுடன் அவனுக்கு அவனது தாயின் நினைவு வந்து விட்டது. அம்மா செய்து கொடுத்த பாயாசம் போன்ற அதே சுவை. அவனையும் அறியாமல் அவனது கண்கள் கலங்கின. அவனைப் பார்த்துக்கொண்டிருந்த முகவைச் செல்வி அவனது கலக்கத்துக்கு காரணத்தைத் தெரிந்து கொண்டாள்.

அவனது அருகில் வந்து அவனது தலையை கோதிவிட்டு. ஏங்க நம்ம ஊருல ஒரு சின்ன வீடா ஒரு வீடு கட்டலாம்ங்க, விடுமுறை தினங்கள்ள அங்க போய் இருக்கலாங்க“ என்றாள்.

விழாமைந்தன் வியப்பும் மகிழ்ச்சியுமான பார்வையால் மனைவியை அளந்தான். அவன் குடித்துக்கொண்டிருந்த பாயசத்தைவிட முகவைச் செல்வியின் அந்த வாக்கியங்கள் இனிப்பாக அவன் செவியில் இறங்கின.

அடுத்த விடுமுறையிலேயே விழாமைந்தன் ஊருக்குச் சென்றான். வீடு கட்டலாம் என்று வந்தேன் என்று உறவினர்களிடம் விழா மைந்தன் சொன்னபோது,“தம்பி உங்க அப்பா அம்மா வாழ்ந்த வீட்டை விக்கப் போறதா அவங்க சொன்னாங்க. நீ புதுசா கட்ட வேண்டிய அவசியம் இல்லை, கொஞ்சம் மராமத்து வேலை செஞ்சா போதும். புதுவீடு மாதிரி ஆகிடும்ப்பா அவங்கக்கிட்ட நான் பேசட்டுமா தம்பி“ என்று, ஒன்று விட்ட ஒரு அண்ணன் கேட்ட போது, அவனால் மகிழ்ச்சியைத் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. “வாங்கண்ணே நானும் வரேன் போய்ப் பேசுவோம் என்று கிளம்பி விட்டான்.

சந்தித்தார்கள், பேசினார்கள். அதற்குப் பின் இரண்டு மூன்று பயணங்கள் வந்து போனான் வீடு இவன் பெயருக்கு மாறியது. மனைவி மக்களோடு வந்தான். மராமத்து வேலைகளைச் செய்தான். பிள்ளைகளுக்கு நீளமான விடுமுறை வந்தபோது எளிமையாக குடியேறல் நிகழ்ச்சி நடத்தினான்.

விழாமைந்தன், முகவைச் செல்வியைவிட, அவர்களது பிள்ளைகள் தான் அதிகமாக மகிழ்ச்சி அடைந்தார்கள். ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு புதிய, மகிழ்வான நாளாக அமைந்தது. ஒருநாள் விழா மைந்தனின் மகன் “அப்பா, நூத்துக் குச்சின்னு ஒரு விளையாட்டு இருக்குன்னு சொன்னீங்களே அதச் சொல்லிக் கொடுங்கப்பா“ என்றாள்.

“அத நானே மறந்து போயிட்டேம்மா“ இரு யாருக்கிட்டயாவது கேட்போம் என்று திண்ணைக்கு வந்து வருவோர், போவோரிடம் விபரம் கேட்கலாம் என்று அமர்ந்தான்.

12 வயது மதிக்கத்தக்க பையன், அவன் வீட்டைக் கடந்த போது," தம்பி இங்க வாப்பா" என்று அவனை அழைத்தான். அந்தப்பையன் என்ன சார்" என்றான்.

"நூத்துக்குச்சி விளையாட்டு உனக்கு விளையாடத் தெரியுமா" என்று கேட்டான். அந்தப்பையனோ நூத்துக்குச்சின்னா என்று எதிர்க்கேள்வி கேட்டான். ஆகா ஊர்தான் மாறிப்போய்விட்டது என்று நாம் நினைத்திருந்தோம், பழைய விளையாட்டுகளும் மறைந்து விட்டது போலல்லவா இருக்கிறது என்று வருத்தமடைந்து" சரிப்பா நீ போ" என்று அனுப்பி விட்டு, தனது சிறுவயது நண்பனான சுப்பையாவைத் தேடிச் சென்றான். குளக்கரையில் அவனைக் கண்டு நூத்துக்குச்சி பற்றிக் கேட்டான். அதெல்லாம் இப்ப யாரும் வெளையாடுறதில்ல விழா. இரு நம்ம விளையாடலாம் என்று கூறிவிட்டு அருகில் நின்ற தென்னை மரத்தருகில் சென்று இரண்டு மூன்று தென்னங்கீற்றுகளைப் பிய்த்துக்கொண்டு வந்தான். அந்தப் பச்சை இலையைப் பிய்த்துப் போட்டு விட்டு மீதமிருந்த ஈக்கியை ஒரே அளவாக பத்துக்குச்சிகள் ஒடித்து, அதன்பின் மற்றொன்றை அந்தக் குச்சிகளை விட பெரிதான அளவில் ஒடித்துக்கொண்டு, நீ முதல்ல விளையாடுறியா நான் வெளயாடவா" என்று கேட்டான்.

"எனக்கு மறந்து போச்சுப்பா நீ முதல்ல வெளையாடு அப்புறமா நான் வெளையாடுறேன்" என்றான் விழாமைந்தன்.

சுப்பையா சிறிய பத்துக்குச்சிகளையும் வலது உள்ளங்கையில் வைத்து மடக்கிக் கொண்டான். அப்படியே புறங்கையைத் திருப்பி நடுவிரலுக்கும் மோதிர விரலுக்கும் இடையில் பெரிய ஈக்கிக் குச்சியை விழாமைந்தனை செருகச் சொன்னான். விழாமைந்தனும் மிகவும் கவனமாக அவனது கையைக் குத்திவிடாமல் செருகினான். சுப்பையா அப்படியே கையை விரித்தான்.

குச்சிகள் அனைத்தும் தரையில் விழுந்தன. எல்லாக் குச்சிகளுக்கும் மேலே இருந்த குச்சியை அதற்கும் கீழே கிடந்த குச்சிகள் ஆடாமல் எடுத்தான். அவன் எடுத்தது சின்னக்குச்சி. "பத்து புள்ளி எடுத்துட்டேம்பா, என்று கூறிவிட்டு அதே போல் இரண்டு குச்சிகளை எடுத்துவிட்டு அதற்கு அடுத்ததாக இருந்த பெரிய குச்சியை எடுக்க முனைந்தான். ஆனால் அதற்குக் கீழே இருந்த ஒரு சிறிய குச்சி ஆடிவிட்டது. "அடடா அந்தக்குச்சி ஆடாம இருந்திருந்தா என் புள்ளி 130 உசந்திருக்கும் ஆனா ஆடிடுச்சு. சரி நீ விளையாடு விழா" என்றான். விழா மைந்தனுக்கு விளையாட்டுப் புரிந்து விட்டது. சுப்பையாவோடு சிறிது நேரம் விளையாடினான் விளையாடிய எல்லாவற்றிலும் சுப்பையாவே அதிக புள்ளிகள் எடுத்தான். என்றாலும் மகிழ்ச்சியோடு வீட்டுக்கு வந்து மனைவியோடும் பிள்ளைகளோடும் நூத்துக்குச்சி விளையாட்டை விளையாடினான். விழா மைந்தனின் மகிழ்ச்சி நூற்றுக் நூறானது. அவனது குடும்பத்தினருக்கும் தான். ◆

## தர்பூசணியின் மருத்துவ குணங்கள்

ஜில்லென்ற தர்பூசணியின் சுவையில் மயங்காதவர்கள் இருக்க முடியாது. கொளுத்தும் வெயிலில் சுவைக்கும்போது, தாகம் தணியும். உடலும், உள்ளமும் குளிரும்.


தர்பூசணியில் பசலைக்கீரைக்குச் சமமான அளவு இரும்புச் சத்து அதிகம் உள்ளது. வைட்டமின் சி, ஏ, பி 6, பி1 உள்ளன. பொட்டாசியம், மெக்னீசியம் போன்ற தாது உப்புகளும் காணப்படுகின்றன. 100 கிராம் தர்பூசணியில் 90 சதவீதம் தண்ணீர் மற்றும் 46 கலோரி, கார்போஹைட்ரேட் 7 சதவீதம் உள்ளது.தர்பூசணியை சாப்பிட்ட பிறகு ஏற்படும் வேதியியல் மாற்றம் காரணமாக சிட்ரூலின் அர்ஜினைன் என்ற வேதிப்பொருளாக மாற்றப்படுகிறது.

அது இதயத்தையும், ரத்த ஓட்டம் சம்பந்தமான உடல் உறுப்புகளையும் ஊக்குவிக்கிறது என்று ஆய்வில் தெரியவந்துள்ளது. சிட்ரூலின் அர்ஜினைன் வேதி மாற்றம் சர்க்கரை நோய்க்காரர்களுக்கும், இதய நோயாளிகளுக்கும் கூட நன்மை செய்கிறதாம். கண்களைப் பராமரிக்க வைட்டமின் ஏ, மூளை மற்றும் செல் பாதிப்பை தடுக்க வைட்டமின் சியையும் கொண்டு செயல்படுகிறது. தமனி, ரத்த ஓட்டம், இதய ஆரோக்கியத்தை காக்கும் அமினோ அமிலங்கள் போன்றவற்றை சீராக இயக்கக் கூடியது. உடலிற்கு தேவையான இன்சுலினையும் மேம்படுத்தும். கட்டி, ஆஸ்துமா, பெருந்தமனி வீக்கம், நீரிழிவு, பெருங்குடல் புற்று நோய் மற்றும் கீல் வாதம் போன்றவற்றை தர்பூசணி மூலம் குணப்படுத்த முடியும். சதையுடன் விதையும் பலன் தரக்கூடியது. விதையில் அதிக அளவில் ஊட்டச்சத்துகள் அடங்கியுள்ளன. இதில் உள்ள மெக்னீசியம் மற்றும் புரதம் கொழுப்பைக் குறைக்க வல்லது.

தர்பூசணி தென் ஆப்ரிக்காவைத் தாயகமாகக் கொண்டது. முதலில் எகிப்தில் அதிகளவில் பயிரிடப்பட்டது. 7ம் நூற்றாண்டில் இந்தியாவிலும், 10ம் நூற்றாண்டில் சீனாவிலும் தர்பூசணி அறிமுகமாகியுள்ளது. உலகில் தர்பூசணியை அதிகளவில் உற்பத்தி செய்யும் நாடாக சீனா விளங்குவது குறிப்பிடத்தக்கது

சங்கப் 4 தமிழ்த் திருவிழா

## ம. ஜெகத் கஸ்பார்
நிறுவனர் – நாம்.



நான்காம் உலகம் என்ற சொல்லாடலை அறி முகப்படுத்தியவர் லண்டனில் வசிக்கும் யாழ்ப் பாணத்து சட்ட வல்லுநர் நடேசன் சத்யேந்திரா அவர்கள். இன்று நாம் தேசியம் பேசினால் இந்தியாவிற்கு எதிர் என்ற நிலை இருக்கிறது. அமெரிக்காவிற்கு நாம் பயணியாகப் போகலாம். அல்லது ஒர்க்கிங் பெர்மிட் பெற்று வேலை பார்க்கலாம். அங்கு பச்சை அட்டை வாங்கி குடியு ரிமையும் வாங்கலாம்.

நான் அமெரிக்க குடியுரிமை வாங்கிவிட்டால் நான் அமெரிக்கனா? தமிழனா? அமெரிக்கத் தமிழனா? எனது நாடுதான் அமெரிக்கா ஆனால் நான் தமிழன். அப்படித்தான் இங்கேயும் எனது நாடு இந்தியா. நான் தமிழன். எனது தேசியம் தமிழ். இந்தியா பல தேசியங்களின் கூட்டு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நான் இந்தியக் குடிமகன் என்ற பெருமை எனக்கு உண்டு.

தேசியம் என்பது வேறு, குடிமகன் என்பது வேறு. ஒரு குர்தீஷ் இனப் பெண் போராளியிடம் ஏன் போராட்டம் நடத்துகிறீர்கள் என்று கேட்கும் போது, அவள் சொன்ன பதில் “இந்த நிலத்தில் கடந்து போன எனது மூதாதையர்கள் எண்ணங் களுக்காக, பூத்துக்குலுங்கும் மலர்களுக்காக போராடப் போகிறேன்“ என்கிறாள்.

தேசிய இனத்தின் தகுதிகள் என்ன? 1. நிலப் பரப்பில் நீண்டு வாழ்தல் 2. ஒரு மொழி 3. பண்பாட்டு வாழ்க்கை முறை 4. பொது வரலாறு 5. பொதுக் கனவு இவை அனைத்தும் தமிழர்களிடம் உண்டு. இதை ஐ நா சபைதான் வரையறுத்திருக் கிறது. தமிழ் மக்கள் குழுமத்திற்கு இவைகள் இருந்தும் தமிழர்களுக்கான நாடு இல்லை.

உலக வரைபடம் ஒரே நிலையில் இருந்ததா? கிழக்குத் தைமூர் இராணுவம் தோல்வி அடைந்தது. ஆனால் அரசியல் காரணங்களுக்காக வெற்றி அடைந்து தனி நாடாகியது. ஆகவே இலங்கை எம் பி ஸ்ரீதர் அவர்கள் கவலைப்பட வேண்டாம். ஒவ்

# நான்காம் உலகம் நாடற்றவர்களின் தேசியம்

வொரு பெரும் போரும் ஒரு பெரிய மாற்றத்தை கொண்டு வரும். இரண்டாம் உலகப்போரில் பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன் நாடுகள் இருந்தன. ஜப்பான் ஜெர்மனியோடு சேர்ந்து கொண்டது. நேதாஜிக்குப் பின் தமிழ் வீரர்கள்தான் இருந் தார்கள். வியட்நாம், மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளின் விடுதலைக்கு மேற்கண்ட நிகழ்வுகள் காரணமாக இருந்தன. நமது நாட்டின் விடுதலைக்கு காந்தியும் காரணம்தான் ஆனால் முழுமையான காரணம் வல்லரசுகள் போர் செய்து களைத்துப் போயிருக்காவிட்டால் சுதந்திரம் நமக்குக் கிடைத்திருக்காது. அவர்களாகவே காங்கிரசிடம் நாட்டைக் கொடுத்துவிட்டுப் போனார்கள்.

போருக்கு எதிரான மனநிலை வந்துவிட்டது. வார் ஹீரோ சர்ச்சில் தோல்வியடைந்தார். பர்மா பகுதியில் கச்சின், கரன் இன மக்களின் கதை துயரம் நிறைந்ததாக இருந்தது. ஆங்கிலேயனுக்கு காலனி ஆதிக்கத்தில் விருப்பம் இல்லை. அகண்ட பாரதம் என்ற கனவும் இல்லை. ஒவ்வொரு இடத்திற்குச் செல்லும் போது ஒவ்வொரு சிற்றரசர்களிடமும் அனுமதி வாங்க வேண்டியிருந்தது. அதைத் தவிர்ப் பதற்காக, தனது வியாபாரத்திற்காக பல நாடுகளை சேர்த்துத் தைத்து இந்தியப் பேரரசு என்றான். ஏமன், பாலஸ்தீனம், திபெத் போன்ற நாடுகள் தான் நான்காம் உலக நாடுகள் என்று சொல்லப் படுகின்றன.

தனி நாடாக மாற மக்கள் தொகை ஒரு தகுதியாக இருக்கிறதா என்றால் இல்லை. ஒரு தீவு உண்டு. அது தனி நாடாக ஐ நா வால் அங்கீகரிக்கப் பட்டிருக் கிறது. அங்குள்ள மக்களின் எண்ணிக்கை என்ன தெரியுமா வெறும் 56 பேர்கள் மட்டுமே. போப் ஆண்டவரின் ஆளுகையில் உள்ள நாட்டின் மக்கள் தொகை 880பேர்கள் மட்டுமே. இவர்களுக் கெல்லாம் உலகெங்கும் தூதரகம் வைத்துக் கொள்ளும் உரிமை உண்டு. தஜிகிஸ்தான் என்ற நாட்டில் மக்கள் தொகை எட்டு லட்சம். பகுவா கெனியா மக்கள் தொகை ஏழு லட்சம். மக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் தனி நாடாக இருக்க முடியாது என்பது அல்ல. வசதி எதுவோ அதுவே சரி. பெரிய நாட்டில் நாம் இருக்கிறோம் மகிழ்வு என்றால் சரி.

இலங்கையில் பல்வேறு அரசுகள் இருந்தன. வெள்ளையன் ஒன்றாக ஆக்கி னான். போகிறபோது ஒருத்தன் கையில் கொடுத்து விட்டுப் போய் விட் டான். என்னுடைய இறை யாண்மை எனக்குரியது. நீ ட்ரஸ்டிதான் என்பதை ஸ்காட்லாந்தில் காண முடிகிறது. ஒரு பகுதியில் வாழும் மக்களின் அனுமதி இல்லாமல் எதையும் அங்கே கொண்டு வர முடியாது, எடுத்துக் கொண்டு போக முடியாது. தமிழ் மீனவர்கள் சுடப்பட்டால் ஃபாரின் பாலிசி என்கிறார் சுப்ரமணியசாமி. மீனவர்களின் நலத்தைப் பார்க்காமல் அவர்களின் அனுமதி பெறாமல் நீ எப்படி கச்சத்தீவைக் கொடுக் கலாம்? மீத்தேனும் அப்படித்தான்.

என் ஊரின் முடிவு, என் இறையாண்மையை நான் கேட்க எனக்கு தகுதி உண்டு. எங்கோ இருப்பவர்களின் மின்சாரத் தேவைக்காக நான் எனது வாழ்வை அடகு வைக்க முடியாது. இந்தியக் குடிமக்களாக இருக்கத் தான் விரும்புகிறோம். மீத்தேன், நியூட்ரினோ, அயல்நாட்டு அணுமின் நிலையங்கள் வாழ்கின்ற மக்களின் விருப்பம் இல்லாமல் உள்ளே வரக் கூடாது. நமது தேசியத்தை நாம் காக்க வேண்டும்.

1985 இல் கூடங்குளத்தில் அணுஉலை கொண்டு வரக்கூடாது என்று போராடியவர்களின் நானும் ஒருவன். அப்போது நான் மாணவன். சுவிச்சர் லாந்தில் நேரடி ஜனநாயகம் இருக்கிறது. இங்கே 33 விழுக்காடு மக்களின் ஆதரவைப் பெற்றவர்கள் ஆளுகிறார்கள்.

விகிதாச்சார முறை தேவை. அரசுக்கு எதிராக வாக்களித்த 67 விழுக்காட்டினர் எதுவும் செய்ய முடியாமல் இருக்கின்றனர்.

ஈழத்தை அழித்தது இந்திய தேசியம். தமிழ் ஈழம் அமைந்தால் உலகமெல்லாம் தூதரகங்களை தமிழீழம் பெற்று விடும், அதைத் தடுக்க வேண்டும் என்பதற்காக இது செய்யப்பட்டது போல் தோன்று கிறது. நாம் செய்த தவறு 50 ஆண்டு கால ஆட்சி யில் ஒரு 50 தமிழர்களைக் கூட வெளியுறவுத் துறை யில் அதிகாரிகளாக ஆக்க முடியவில்லை என்பது தான். நாம் தமிழுணர்வோடு இருக்க வேண்டியது அவசியம்.

◆

# எல்.ஐ.சி.க்கு அபராதம்

வே. வளையாபதி

கடன் வழங்குவதற்கான ஒப்புதல் ஆணை வழங்கிய பின்பு கடன் கொடுக்க மறுத்த காரணத்துக்காக நுகர்வோருக்கு எல்.ஐ.சி.வீட்டு வசதி கடன் கழகத்தினர் ரூ.55 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று சென்னை நுகர்வோர் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை (தெற்கு) நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் ரகுநாதன் என்பவர் தொடர்ந்த வழக்கில்:

பள்ளிக்கரணை பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பில் வீடு வாங்குவதற்காக எல்.ஐ.சி.வீட்டு வசதி கழகத்திடம் ரூ.30 லட்சம் கடன் கேட்டு விண்ணப்பித்தேன். கடன் வழங்குவதற்கான ஒப்புதல் ஆணையை எல்.ஐ.சி. வீட்டு வசதி கழகத்தினர் வழங்கினார்கள். மேலும் கடன் விண்ணப்ப பத்திரங்களை சரிபார்ப்பதற்கான தொகையையும் நான் செலுத்தி இருந்தேன். இந்நிலையில் எல்.ஐ.சி.வீட்டு வசதி கழகத்தினர் கடன் வழங்காமல் காலம் தாழ்த்தி வந்தனர். அதற்கான காரணத்தையும் அவர்கள் கூறவில்லை.

உரிய நேரத்தில் கடன் தொகை கிடைக்காத காரணத்தால் கட்டுமான நிறுவனத்துக்கு நான் ரூ.2.36 லட்சத்தை வட்டியாக செலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எல்.ஐ.சி.வீட்டு வசதி கழகத்தினர் உரிய நேரத்தில் கடன் வழங்கி இருந்தால் கட்டுமான நிறுவனத்துக்கு நான் அந்த தொகையை செலுத்த வேண்டி இருந்திருக்காது.

இதனால், தான் பத்திரங்களை சரிபார்க்க செலுத்திய தொகை, கட்டுமான நிறுவனத்துக்கு செலுத்திய வட்டி மற்றும் மனஉளைச்சல், எல்.ஐ.சி.வீட்டுக் கடன் கழகத்தின் சேவை குறைபாடு உள்ளிட்டவைகளுக்காக மொத்தம் ரூ.4,53,175 தரவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த மனு தொடர்பாக சென்னை (தெற்கு) நுகர்வோர் குறைதீர்வு ஆணையத்தின் தலைவர் ஜெயபாலன், உறுப்பினர்கள் தீனதயாளன், அமலா ஆகியோர் விசாரித்து அளித்த தீர்ப்பில்:

ரகுநாதன் எல்.ஐ.சி. வீட்டு வசதி கடன் கழகத்திடம் உரிய ஆவணங்களை வழங்கி இருக்கிறார். கடனுக்கான ஒப்புதல் ஆணை வழங்கிய பின்பும், எல்.ஐ.சி. வீட்டு வசதி கழகத்தினர் கடன் வழங்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த செயல் சேவை குறைபாடு ஆகும்.

இதன் காரணமாக பாதிக்கப்பட்ட ரகுநாதன் பத்திரம் சரிபார்க்க செலுத்திய ரூ.17,175ஐ திரும்ப கொடுக்க வேண்டும். மேலும் அவருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்காக ரூ.50 ஆயிரத்தை இழப்பீடாகவும், ரூ.5 ஆயிரத்தை வழக்கு செலவுக்காகவும் வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

எம்.பி.பி.எஸ் படிக்காமல் ஆங்கில மருத்துவ முறையில் பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்து வரும் போலி டாக்டர்கள் கைது செய்யப்படுவது தொடர் கதையாக உள்ளது. இதனால் மருத்துவம் படித்த உண்மையான மருத்துவர் யார்? போலி மருத்துவர் யார்? என தெரியாமல் மக்கள் குழப்பத்தில் உள்ளனர்.

இது தொடர்பாக தமிழ்நாடு மருத்துவக் கவுன்சில் தலைவர் டாக்டர் வி.எஸ்.துரைராஜ் கூறியது:

தமிழ்நாடு மருத்துவக் கவுன்சிலில் 1915ஆம் ஆண்டு முதல் இதுவரை 1,09,252 பேர் பதிவு செய்துள்ளனர். இவர்களில் சுமார் 20 ஆயிரம் பேர் இறந்து இருப்பார்கள். சில மருத்துவர்கள் வெளி நாடுகளில் குடியேறி உள்ளனர். தற்போது தமிழகத்தில் சுமார் 80 ஆயிரம் மருத்துவர் உள்ளனர்.

போலி மருத்துவர்களை எளிதில் கண்டுபிடிக்க மருத்துவர்கள்தான் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். மருத்துவம் படித்து தமிழ்நாடு மருத்துவக் கவுன்சிலில் பதிவு செய்த மருத்துவர்கள் அனைவரும் தங்களுடைய பதிவு எண் சான்றிதழை, சிகிச்சைக்கு வரும் பொதுமக்கள் பார்வையில் படும்படி வைக்க வேண்டும். நோயாளிகளுக்கு எழுதிக் கொடுக்கும் மருந்துச் சீட்டு மற்றும் கடிதத்தில் தன்னுடைய பெயர், படிப்பு மற்றும் பதிவு எண்ணை குறிப்பிட வேண்டும் என்றார்.

இது தொடர்பாக தமிழ்நாடு மருத்துவக் கவுன்சில் துணைத் தலைவர் மருத்துவர்கள் பி.பால கிருஷ்ணன் கூறியது:

தமிழகம் முழுவதும் மருத்துவம் படிக்காமல் அலோபதி சிகிச்சை அளித்து வரும் சுமார் 30 ஆயிரம் போலி மருத்துவர்கள் உள்ளனர். போலி மருத்துவர்கள் செய்யும் தவறு, உண்மையான அனைத்து மருத்துவர்களையும் பாதிக்கிறது. இதனால் மருத்துவர்கள் மீது பொதுமக்கள் வைத்துள்ள நம்பிக்கை போய்விடுகிறது. எனவே போலி மருத்துவர்களைக் கண்டுபிடிக்க மாவட்டந்தோறும் தனிப்படை அமைக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

பொதுமக்கள் சிகிச்சைக்கு செல்லும் போது, அந்த மருத்துவர் போலி என்ற சந்தேகம் இருந்தாலோ அல்லது போலி மருத்துவர்கள் என தெரிய வந்தாலோ உடனடியாக தமிழ்நாடு மருத்துவக் கவுன்சிலுக்கு, எண்.914, பூந்தமல்லி நெடுஞ்சாலை, அரும்பாக்கம் என்ற முகவரியில் புகார் தெரிவிக்கலாம்.

தமிழ்நாடு மருத்துவக் கவுன்சிலை 04426265678 என்ற எண்ணில் தொடர்பு கொண்டும் புகார் அளிக்கலாம். போலி மருத்துவர் என தெரியவந்தால், காவல்துறையிடம் ஒப்படைத்து விடுவோம் என தமிழ்நாடு மருத்துவக் கவுன்சில் தலைவர் வி.எஸ். துரைராஜ் தெரிவித்தார்

**உமா மகேசுவரி**



# போலி மருத்துவர்கள்!

# தஞ்சாவூர் கலைத்தட்டு

தஞ்சாவூர் கலைத்தட்டு பிரசித்தி பெற்றதாகும். இந்தக் கலைத்தட்டுக்கு உலக அங்கீகாரம் கிடைக்கும் வகையில் புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. இதற்கான புவிசார் குறியீடு கடந்த ஆண்டு வழங்கப்பட்டது. இந்த புவிசார் குறியீட்டிற்கான அங்கீகாரச் சான்றிதழ் தஞ்சையில் வழங்கப்பட்டது.

இந்த அங்கீகாரச் சான்றிதழை, தஞ்சை மாவட்ட தொழில் மையம் மற்றும் 52 பேர்களுக்கு வழங்கப்பட்டது. தொழில் மைய மேலாளர் ராமலிங்கம் மற்றும் 52 கலைத்தட்டு கைவினைஞர்கள் பெற்றுக் கொண்டனர். இந்தச் சான்றிதழ்களை அறிவுசார் சொத்துரிமை வக்கீல் சங்கத் தலைவரும், அரசு வக்கீலுமான சஞ்சய்காந்தி, தஞ்சை மாவட்ட தொழில் மைய மேலாளர் ராமலிங்கம் ஆகியோர் வழங்கினர்.

அறிவு சார் சொத்துரிமை வக்கீல் சங்கத் தலைவர் சஞ்சய்காந்தி கூறியதாவது:

இந்தியா முழுவதும் 215 பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. இதில் தஞ்சாவூர் வீணை, தஞ்சாவூர் ஓவியம், நாச்சியார் கோவில் குத்துவிளக்கு, சுவாமிமலை வெண்கலச்சிலைகள் ஆகியவை அடங்கும். தற்போது தஞ்சாவூர் கலைத்தட்டுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. அதுவும் தொழில் மையம் மற்றும் தனிப்பட்ட நபர்கள் 52 பேருக்கு அங்கீகாரச் சான்றிதழ் வழங்குவது இதுவே முதல்முறை.



தஞ்சாவூர் கலைத்தட்டு 17ஆம் நூற்றாண்டில் மன்னர் சரபோஜி காலத்தில் வடிவமைக்கப்பட்டது. தற்போது புவிசார் குறியீடு பெற்றுள்ளதன் மூலம் தஞ்சாவூர் கலைத்தட்டு உலக அங்கீகாரம் பெற்றுள்ளது. மேலும் தமிழகத்தில் 27 பொருட்களுக்கு விரைவில் புவிசார் குறியீடு கிடைக்கப்பெற உள்ளது.

இதில், ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா, சேலம் மாங்காய், கோவில்பட்டி கடலை மிட்டாய், தமிழக அரசு அறிவித்துள்ள 10 பொருட்களான மாமல்லபுரம் மரவேலைப்பாடு, மயிலாடி கற்சிற்பம், தஞ்சாவூர் நெட்டிங் வேலைப்பாடு, தஞ்சாவூர் பூ வேலைப்பாடு உள்பட 27 பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதற்கான முதல்கட்ட பணி முடிந்து 2வது கட்ட பணிநடைபெறுகிறது. விரைவில் இதற்கு புவிசார் குறியீடு கிடைக்கப்பெற உள்ளது.

மேலும் சுலோச்சனா பன்னீர்செல்வம் கூறுகையில் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான அறிவுசார் சொத்துரிமை மையம் தொடங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் புவிசார் குறியீடு பெற்ற பொருட்களில் தலைசிறந்த பொருட்களுக்கு ஆண்டுதோறும், ரூ.1. லட்சம் பரிசு, விருது வழங்க உள்ளோம். இந்த மையத்தின் மூலம் வேளாண்மை உற்பத்திப் பொருட்கள் மற்றும் குடிசைத் தொழில் உற்பத்திப் பொருட்களை மற்றும் குடிசைத் தொழில் உற்பத்தி பொருட்களை புவிசார் குறியீடு பெற விண்ணப்பிக்க உள்ளோம்.

அதன்படி முதல்கட்டமாக தஞ்சை பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பழமை வாய்ந்த நெல்ரகமான சீரகச் சம்பா, பொன்னி நெல் ரகம் மற்றும் கடலோர மாவட்டங்களில் உற்பத்தி செய்யப் படும் கருவாடு போன்ற வற்றுக்கு புவிசார் குறியீடு பெற விரைவில் விண்ணப்பிக்க உள்ளோம் என்று கூறினார்.

உமா மகேசுவரி

சங்கம் 4
தமிழ்த் திருவிழா

அனைவருக்கும் வணக்கம். 2006 இல் இருந்து எனக்கு வழிகாட்டியாய் அருட்தந்தை கஸ்பார் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றி.

முத்துலட்சுமி அவர்கள் புதுக்கோட்டையில் பிறந்தவர். பெண்கள் பள்ளி செல்லாத அக்காலத்தில் பள்ளிக்குச் சென்று படித்தார். மூடப்பட்ட குதிரை வண்டியில் முத்துலெட்சுமி இருப்பார். அந்த வண்டி பள்ளி அருகே நிற்கும். ஆசிரியர்கள் மற்ற மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதை குதிரை வண்டிக்குள் இருந்து கொண்டே கவனித்து மனதுக்குள் ஏற்றிக் கொள்வார். மேல் வகுப்புகள் செல்ல முயன்றபோது அனுமதி மறுக்கப்பட்டது. வகுப்பில் மாணவியைச் சேர்த்தால் மாணவர்களின் படிப்பு கெட்டுப் போய்விடும் என்று ஆண் பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். முத்து லெட்சுமி மன்னரிடம் உதவி கேட்கிறார். பிறகு மாணவர்களுக்கும் முத்துலெட்சுமிக்கும் இடையில் திரை கட்டடப்பட்டு படிப்பு தொடர்கிறது. அப்போது அவ்வகுப்பில் படித்தவர்கள் மொத்தம் 100பேர் இதில் பத்துப் பேர்தான் தேர்ச்சி அடைகிறார்கள். அந்த பத்துப் பேரில் முத்துலெட்சுமியும் ஒருவர்.

படித்தது போதும் திருமணம் செய்துகொள் என்கிறார்கள் வீட்டார். முத்துலெட்சுமியோ மறுத்துவிட்டு மருத்துவம் படிக்க வேண்டும் என்கிறார். சென்னை எம் சி சி யில் சேர்கிறார். மருத்துவம் படிக்க வந்த முதல் பெண் இவர்தான். அங்கே எல்லோரும் சிரிக்கிறார்கள். அங்கேயும் அவருக்கு அவமானமும் எதிர்ப்பும் வலுக்கிறது. விளையாட்டுகளில் கலந்து கொள்ளக்கூடாது, ஆண்களிடம் பேசக்கூடாது என்ற கட்டுப்பாடுகள் அவருக்கு விதிக்கப்படுகின்றன. அக்காலத்தில் அறுவைச் சிகிச்சைக்கான படிப்பை வெள்ளைக்கார ஆண்களே படித்தார்கள். முத்துலெட்சுமி அதை எடுத்துப் படித்தார். அறுவைச் சிகிச்சைக்குப் படித்த





# "மீறல் மகள் மருத்துவர் முத்துலெட்சுமி ரெட்டியார்"

## மேனாள் ரோட்டரி ஆளுநர் திரு. ஒளிவண்ணன் உரை

முதல் இந்தியர் இவர்தான். இவரது இளம் வயதில் இவருடைய சகோதரி புற்றுநோயால் இறந்தார். இதன் தாக்கமோ என்னவோ அடையாறு புற்று நோய் மருத்துவமனையை டாக்டர் முத்துலட்சுமி அவர்கள் ஆரம்பித்தார்.

திருமணம் செய்துகொள்ள வீட்டார் கட்டாயப்படுத்தியபோது, மணமகன் சுந்தர ரெட்டி அவர்களிடம், எனது பணியில் எதுவும் குறுக்கீடு செய்யக்கூடாது என்று ஒப்புதல் வாங்கிக் கொண்டே திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தார். சென்னை யின் மிகச்சிறந்த அறநிறுவனமான ஔவை இல்லத்தை உருவாக்கியவர் டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டி அவர்கள். தமிழக மேலவையின் முதல் பெண் உறுப்பினராகவும் ( எம் எல் சி ) இவர் பணியாற்றினார்.

அந்த நாட்களில் தேவரடியார் என்ற முறை தமிழகத்தில் இருந்து வந்தது. குழந்தை இல்லாதவர்கள் வேண்டிக் கொள்வார்களாம். முதல் குழந்தை பெண்ணாகப் பிறந்தால் கோவிலுக்கு என்று. ஒரு பெண் குழந்தையை கோயிலுக்கு நேர்ந்து விட்டால் மானியம் வரும் அந்த மானியத்தைக் கொண்டு உயிர் வாழலாம் என்று எண்ணியவர்களும் இந்தச் செயலைச் செய்தார்கள்.

ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் பேர் தேவதாசிகளாக இருந்தார்கள் என்று அந்நாளின் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. அப்போது இந்தியாவின் மக்கள் தொகை சுமார் இருபத்தைந்து கோடி. தேவரடியார் குலத்தைச் சேர்ந்த மூவாலூர் ராமாமிர்தம் அம்மையார் அவர்கள் இந்த தேவரடியார் முறையை ஒழிக்க பெரும் பாடு பட்டார்.

1925க்கு முன் காந்தி சென்னை வந்தால் சீனிவாச ஐயங்கார் வீட்டில் தங்குவாராம். அப்போது வீட்டுக்குள் அழைக்க மாட்டார்களாம். திண்ணை யில் தான் உட்கார வைப்பார்களாம். 1927க்குப் பின்தான் உள்ளே அழைத்து அறையில் தங்கச் செய்தார்களாம்.

முத்துலெட்சுமி அவர்கள் தேவரடியார் முறையை ஒழிக்க சட்ட மேலவையில் பேசுகிறார். இவர் சார்ந்திருந்த கட்சியான காங்கிரஸ் இவருக்கு ஆதரவு கொடுக்கவில்லை. மாறாக தீரர் சத்தியமூர்த்தி என்று பாராட்டப்படுகிற சத்திய மூர்த்தி பார்ப்பனர், தேவரடியார் என்பவர்கள் கடவுளுக்குச் திருப்பணி செய்யும் புனிதமான பணியாளர்கள். அது அப்படியே இருக்கட்டும் அவர்களே அப்பணிகளைத் தொடரட்டும் என்கிறார்.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று பெரியாரிடம் முத்துலட்சமி கேட்க, பெரியாரோ, எங்களுக்கு கிடைத்த கடவுள் அனுக்கிரகம் போதும், அது உங்கள் குடும்பத்துப் பெண்களுக்கும் வேண் டும். ஆகவே, இனி உங்கள் பெண்டு பிள்ளைகளை அனுப்பி வையுங்கள் என்று சொல்லச் சொன்னதும், அதையே டாக்டர் முத்துலெட்சுமியும் சொல்ல, தீரர் சத்தியமூர்த்தி அமைதியாகிவிட்டாராம்.

தேவரடியார் முறை ஒழிக்கப்பட்டதாம். டாக்டர் முத்துலெட்சுமி இது போன்ற பல சமூக நோய்களையும் குணமாக்கியிருக்கிறார்.

◆

---


## முற்றம் இதழுக்கான விளம்பரக் கட்டணங்கள்

பின்னட்டை பல வண்ணம் ரூ. 10,000/-
பின் உள் அட்டை பல வண்ணம் ரூ. 7,000/-
கருப்பு வெள்ளை முழுபக்கம் ரூ. 5,000/-
கருப்பு வெள்ளை அரைப் பக்கம் ரூ. 2500/-
க. வெ. கால் பக்கம் ரூ. 1500/-

சந்தா விவரம்: தனி இதழ் ரூ. 10/-
ஆண்டு சந்தா ரூ. 120/-

# உண்மை முதலில் சாகுமா?

வேயுறுதோளிபங்கன்

பொய்யர்க ளாளும்நாட்டில் மெய்சொன்னால் அவதூறென்பார்
புல்லர்தம் மதிகாரத்தால் புவியினை மிரட்டிவைப்பார்
அரசியல் என்பதிங்கே அனைவரும் வாழ்வதற்கா
அல்லதோர் சிலர்க்குமற்றோர் அடிமைக ளாவதற்கா
அரசியல் என்பதிங்கே முறைசெய்து காப்பதற்கா
அதிகாரத் தால்மிரட்டிக் கொள்ளையடிப்பதற்கா
ஒருசெயல் கூடஆள்வோர் மறைவினில் செய்திடாமல்
உலகிற்கு வெளிச்சமிட்டு உரைப்பதூ டகமா அன்றி
திரிசம வேலைசெய்து மக்களைத் திசைதிருப்பி
பெருமாஃ பியாக்களாகிப் பிழைப்பதூ டகமாசொல்வீர்
புகழ்ந்திடு இகழ்ந்திடானால் நிகழ்ந்தவை திரித்திடாதே
விழுதுபோலக் காக்கும் விளக்கங்க ளிவையிருந்தும்
வீணர்கள் ஊடகத்தை விலைபொரு ளாக்கிவைத்தார்
பொழுதெல்லாம் பொய்யைச்சொல்லி புல்லரை நல்லவர்போலப்
புனைந்திடும் ஊடகத்தார் போலொரு கயவருண்டோ
ஊடகம் இஃதுயிங்கே உண்மைகள் சொல்வதற்கே
நாடகம் செய்துஆட்சி யாளரை நம்புமாறு
நாட்டுமக் கள்கருத்தை நாளும்வ ளைப்பதற்கோ
ஏடுகள் உண்டுயிங்கே யாமதைச் செய்யமாட்டோம்
வாடிடும் பெண்கள் இந்த நாட்டவ ரானாலென்ன
எதிரிநா டானாலென்ன எமக்கவர் ஒருவரேயாம்
மெய்யினைத் தேடிக்கண்டு மையிட்டு எழுதும்போது
மிரட்டுவோர் மிரண்டுநிற்பார் மேதினி எழுந்து நிற்கும்
நெடுங்கால மாகவர்ணக் கொடுமைகள் கண்டநாட்டில்
நல்லதோர் கல்வியின்றி நாலைந்து நூறுஆண்டு
மயங்கிய மக்களெல்லாம் பெரியாரால் விழிப்புக் கொண்டார்
அன்புமற் றுண்மையோடு அறவழிப் போரால்வென்றார்
உலகிதில் நேர்மைவெல்ல உழைப்பதும் எண்ணமாயின்
உண்மையா யுழைப்பவர்தம் உரிமைகள் காக்கவேண்டின்
நிலமிதில் தேர்வு செய்வீர் இதழியல் வாழ்வுதன்னை



# மாற்றுத்திறனாளிகளுக்கான இடஒதுக்கீடு



மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு வழங்கும் விவகாரத்தில் நான்கு வாரத்தில் மத்திய அரசு பதிலளிக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய அரசுப் பணிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மூன்று சதவிகித இடஒதுக்கீட்டை மத்திய பணியாளர் மற்றும் பயிற்சி இலாகா நிறைவேற்றவில்லை என்று கோரி பார்வையற்றோருக்கான தேசிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பின் சார்பில், உச்ச நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது.

இந்த மனு விசாரணைக்கு வந்தபோது, தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் ஆஜராகி வாதிட்ட மூத்த வழக்கறிஞர் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டும், மத்திய அரசின் அலுவலகக் குறிப்புகளின்படி மத்திய பணியாளர் மற்றும் பயிற்சி இலாகா, மாற்றுத்திறனாளிகளுக்கான வேலை வாய்ப்பு இட ஒதுக்கீட்டை பின்பற்ற வில்லை. இது நீதிமன்ற அவமதிப்பு ஆகும் என்றார்.

அப்போது, மத்திய பணியாளர் மற்றும் பயிற்சி இலாகா சார்பில் ஆஜரான அட்டர்னி ஜெனரல் முகுல் ரோஹத்தி, இதில் நீதிமன்ற அவமதிப்பு இல்லை. இதற்கான ஆதாரத்தை இப்போதே என்னால் காண்பிக்க இயலும். எனினும், இது தொடர்பாக பதில் தாக்கல் செய்யப்படும் என்றார். இதைக் கேட்ட நீதிபதிகள் அடுத்த 4 வாரங் களுக்குள் இது தொடர்பாக மத்திய அரசு பதில் அளிக்கும் படி உத்தரவிட்டு வழக்கின் மீதான விசாரணையைத் தள்ளி வைத்தனர்.

**ஜூட்** ◆

# உலகைச் சுற்றும் சோலார் விமானம்


சோலார் எனப்படும் சூரிய ஒளியில் இயங்கும் விமானத்தை சுவிட்சர்லாந்து வல்லுனர்கள் உருவாக்கி உள்ளனர். இந்த விமானத்தால் எந்தவித எரிபொருளும் இன்றி நீண்ட தூரம் பயணிக்க முடியும் என்பதை நிரூபிக்க அதன் வடிவமைப்பாளர்கள் முடிவு செய்துள்ள னர். இதற்காக அந்த விமானத்திலேயே உலகைச் சுற்றிவர அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

தற்போது அபுதாபியில் இருக்கும் அந்த விமானம் அடுத்த மாதம் (பிப்ரவரி) தனது உலகப் பயணத்தைத் தொடங்குகிறது. இந்த விமானம் இந்தியா, மியான்மர், சீனா, அமெரிக்கா மற்றும் தெற்கு ஐரோப்பா வழியாக மீண்டும் அபுதாபியை அடைகிறது. சுமார் 5 மாதங்களாக வெறும் சூரிய ஒளியை மட்டும் பயன்படுத்தி இந்த 35 ஆயிரம் கி.மீ.தூரத்தை விமானம் கடக்கிறது.

இந்த விமான வடிவமைப்புத் திட்டத்தில் பங்கு கொண்டவரும், விமானியுமான சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பெர்ட்ரான்ட் பிக்கார்டுடன் மற்றொரு விமானியும் இணைந்து இந்த விமானத்தை இயக்குகின்றனர். பயணத்தின் போது 5 இரவும், பகலும் தொடர்ந்து வானிலேயே பறக்க இவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இது குறித்து பிக்கார்டு கூறுகையில் சூரிய ஒளி போன்ற புதுப்பிக்கத்தக்க மூலங்களால் அதிசயங்களை நிகழ்த்த முடியும். இந்த விமானத்தால் ஒரு துளி எரிபொருளும் இன்றி இரவு, பகல் என தொடர்ந்து பறக்க முடியும், என்பதை உலகுக்கு உணர்த்த விரும்புகிறோம் என்றார்.

**ஜோஸ்வா**



# தொடர் கல்வி மதிப்பீடு திட்டம்
# மெட்ரிகுலேசன் பள்ளிகளில் அமல்

பள்ளிக்கூட மாணவமாணவிகளுக்கு அவர்கள் தேர்வில் பெறும் மதிப்பெண்களை மட்டும் வைத்து முன்பு அவர்களை தேர்ச்சி பெற வைத்தனர். ஆனால் கடந்த சில வருடங்களுக்கு முன்பு அரசுப் பள்ளிகளில் 1வது வகுப்பு முதல் 9வது வகுப்பு வரை தொடர் கல்வி மதிப்பீடு திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதன்படி மாணவர்கள் வகுப்புகளுக்கு சரியான நேரத்தில் வருவது, ஒழுக்கமாக நடந்து கொள்ளுதல், தேசத்தின் மீது பற்றுவைத்தல், சகமாணவர்களுடன் நடந்து கொள்ளும் முறை, ஆசிரியர்களுக்கு மரியாதை கொடுத்தல், விளையாட்டில் ஆர்வம் ஆகிய வற்றுக்கு அவ்வப்போது மதிப்பெண் வழங்கப்படுகிறது. மாணவர்களை தேர்ச்சி பெற வைக்கும்போது அவர்களின் தேர்வு மதிப்பெண் மட்டும் பார்க்காமல் இந்த மதிப்பெண்ணும் சேர்க்கப்படுகிறது.



இந்தத் திட்டம், மெட்ரிகுலேசன் பள்ளிகளிலும் இந்த ஆண்டு அமல்படுத்தப் படுகிறது. இதை யொட்டி மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குனர் பிச்சை தலைமையில் பயிற்சி முகாம் சென்னையில் நடத்தப் பட்டது. தமிழ்நாடு முழுவதும் இருந்து மாவட்டத்திற்கு 4 மெட்ரிகுலேசன் பள்ளி முதல் வர்கள் கலந்து கொண்டனர்.

அவர்கள் அந்தந்த மாவட்டத்தில் உள்ள மற்ற மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு இந்தத் திட்டம் பற்றி எடுத்துரைப்பார்கள்.

இதைத்தொடர்ந்து பயிற்சி முகாம் சென்னை மாவட்டத்தில் பள்ளிக்கல்வி ஆய்வாளர் ஜோசுவா ஜான்சன் தலைமையில் ராயப்பேட்டையில் உள்ள பி.என்.தவான் ஆதர்ஷ் வித்யாலயா பள்ளியில் நடந்தது. பள்ளிக்கல்வி துணை ஆய்வாளர் கே.சத்திய மூர்த்தி முன்னிலை வகித்தார்.

தென் சென்னை மற்றும் மத்திய சென்னையைச் சேர்ந்த 170 மெட்ரிகுலேசன் பள்ளி முதல்வர்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன விரிவுரை யாளர்கள் பயிற்சி அளித்தனர்.

**அமல்ராஜ்**

# மெட்ராஸ், பம்பாய் நீதிமன்றப் பெயர்கள் விரைவில் மாற்றம்

மெட்ராஸ் மற்றும் பம்பாய் ஐகோர்ட்டுகளின் பெயர்கள் விரைவில் மாற்றப்பட்டு, அந்தந்த நகரங்களின் பெயரிலேயே அழைப்பதற்கான மசோதாவை சட்ட அமைச்சகம் தயாரித்து வருகிறது.

இங்கிலாந்து ராணி எலிசபெத் காலத்தில், இந்திய உயர்நீதிமன்ற சட்டம் 1861ன் கீழ் அப்போதைய கல்கத்தா, மெட்ராஸ் மற்றும் பம்பாய் நகரங்களில் உயர்நீதிமன்றங்களை நிறுவ அனுமதி அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து இந்தப் பகுதிகளில் அந்தந்த நகரங்களின் பெயர்களிலேயே உயர்நீதிமன்றம் நிறுவப்பட்டன.

அந்தவகையில் மராட்டிய தலைநகர் பம்பாயில், பம்பாய் ஐகோர்ட்டு 1862ஆம் ஆண்டு ஆகஸ்டு 14ஆம் தேதி திறக்கப்பட்டது. தற்போது இந்த உயர்நீதிமன்றத்துக்கு நாக்பூர், அவுரங்காபாத், கோபா ஆகிய 3 கிளைகள் உள்ளன.

இதன் தொடர்ச்சியாக தமிழகத் தலைநகர் மெட்ராசில், மெட்ராஸ் உயர்நீதிமன்றம் நிறுவப்பட்டது. இதன் ஒரே கிளையாக மதுரை உயர்நீதிமன்றக் கிளை இயங்கி வருகிறது.

மெட்ராஸ் உயர்நீதிமன்றம் தமிழில் சென்னை உயர்நீதிமன்றம் என்று அழைக்கப்பட்ட போதிலும், ஆங்கிலத்தில் மெட்ராஸ் ஐகோர்ட்டு என்ற பெயரே உள்ளது.

இந்தநிலையில் கடந்த 1995ஆம் ஆண்டு மராட்டிய மாநில அரசு பம்பாய் நகரின் பெயரை 'மும்பை' என மாற்றியது. இதைப்போல தமிழகத்திலும் மெட்ராஸ் என்ற பெயர், சென்னை என மாற்றப்பட்டது. ஆனால் இந்த மாநிலங்களில் பழைய பெயரிலேயே இயங்கும் குறிப்பிட்ட சில நிறுவனங்களில், இந்த உயர்நீதி மன்றங்களிலும் அடக்கம்.

எனவே இந்த உயர்நீதிமன்றங்களின் பெயர்களையும், தற்போதைய நகர பெயரிலேயே மாற்ற வேண்டும் என அந்தந்த மாநில அரசுகள் சார்பில் மத்திய அரசுக்கு கோரிக்கை விடப்பட்டது. மேலும் இந்த கோரிக்கைவிடப்பட்டது. மேலும் இந்த கோரிக்கையை வலியுறுத்தி பல்வேறு அமைப்புகளும் மத்திய அரசுக்கு கடிதங்கள் அனுப்பியுள்ளன.

அதன்படி இந்த உயர்நீதிமன்றங்களின் பெயரை மாற்ற மத்திய அரசு முடிவு செய்து உள்ளது. இதற்காக பாராளுமன்றத்தில் சட்டம் ஒன்றை நிறைவேற்ற மத்திய சட்ட அமைச்சகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கான மசோதா தயாரிப்பு நடவடிக்கைகளில் சட்ட அமைச்சகம் தற்போது ஈடுபட்டு உள்ளது

மத்திய அரசின் இந்த முடிவால் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் விரைவில் சென்னை உயர்நீதி மன்றம் என்ற பெயரை அடைகிறது.

இதற்கிடையே கல்கத்தா ஐகோர்ட்டையும், தற்போது உள்ளபடி கொல்கத்தா உயர்நீதிமன்றம் என மாற்ற வேண்டும் என கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.

**இமயவரம்பன்.**



# திருக்குறள்
# மலையாள மொழிபெயர்ப்பு

கேரளத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் முஸ்தபா திருக்குறளை மலையாள மொழியில் மொழிபெயர்த்துள்ளார்.

அரசுப் பள்ளிக்கூடத்தில் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றியவர் முஸ்தபா, பாலக்காடு மாவட்டம். முதலமடை கிராமத்தில் வசித்து வருகிறார். தமிழ் மொழியைக் கற்றுத் தெளிவு பெற்ற முஸ்தபா இரண்டு மொழிகளிலும் புலமை அடைந்தார்.

கேரள மாநிலத்தில் புகழ் பெற்ற எழுத்தாளர் பூந்தானம் நம்பூதிரி எழுதிய ஞானப்பான கவிதை நூலை தமிழ் மொழியில் ஞானச்சிந்து என்ற தலைப்பில் வெளியிட்டார்.

திருக்குறளிலே தார்மீக தத்துவங்கள் அறநெறிகள் திருக்குறளில், இப்போது வெளியாக்கியுள்ளார். சாமியார் சுனில்தாஸ், இலங்கை அமைச்சர் பிரபல கணேசன் திருச்சூர் விழாவில் நூலை வெளியிட்டு எழுத்தாளர் முஸ்தபா மொழியாற்றலைப் புகழ்ந்து போற்றிச் சிறப்பித்தனர்.




அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் பகுதியிலிருந்து 34 அதிகாரங்கள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. குறள், விளக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

பகவத்கீதை, பைபிள், திருக்குர் ஆன், ராமாயணம் மேற்கோள்கள் உரிய இடத்தில் தகுதியாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. எளிய மலையாள மொழியில் நூல் எழுதப்பட்டுள்ளதால், சாதாரண, பாமர, பொது மக்களும் விளங்கிக் கொள்ள முடியும்.

தமிழ்மொழி, மலையாள மொழி இரண்டும் சகோதர நேசத்துடன் பரஸ்பர மரியாதையுடன் பவனிவர மொழியாக்க நூல் உதவும்.

தமிழர்கள், மலையாளிகள் இதயம் இணைய இந்த அரிய மொழியாக்க இலக்கிய முயற்சி பெரிதும் துணை நிற்கும். அற நெறி இலக்கியம் இதயத்தை இளக வைக்கும், மாநில வெறியுணர்வு மங்கும்.

மனித நேயம் தலைதூக்கும், ஒருமைப்பாட்டு உயர்வுக்கு வழி பிறக்கும். இரண்டாயிரம் ஆண்டு தமிழரின் தொன்மை அடையாள இலக்கியக் கருவூலத்தை மலையாளிகள் புரிந்து கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மொழி வேற்றுமை, மொழி விகாரம், மொழி வெறி தணியும். காலத்தின் தேவையுணர்ந்து ஆசிரியர் முஸ்தபா ஆற்றிய சேவைக்கு தமிழ்கூறு நல்லுலகம் நன்றிக்கடன்பட்டுள்ளது. தளராமல் தொய்வில்லாமல் இணக்க முயற்சியில் முஸ்தபா தொடர்ந்து ஈடுபாடு காட்ட வேண்டும். வருங்கால தலைமுறையும் அவரை நிச்சயம் உச்சி மோந்து பாராட்டும். எள்ளளவும் ஐயமில்லை.

சேவை நிறுவனங்கள் முதல் சமூகக் கடமையாக மொழியாக்க நிபுணர்களை உருவாக்க வேண்டும். களத்தில் இறக்கிவிட வேண்டும். தாராள பண உதவியும் வழங்க முன் வருவது அவசியம். அரசியல் வல்லூறுகள் சுய நல நோக்கில் கிளப்பி விடும் ஏராளமான செயற்கையான பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவரவும் இயலும், மாநில மக்களைப் பிரித்தாள்வதில் அபார வெற்றியும் ஆதிக்க ஆட்சியாளர்கள் கண்டு வருகின்றனர்.

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டதால் மொழி வெறியில் போலித்தனமும், கயமையும், கபடமும் சேர்ந்துக் கொண்டன.

தேவையற்ற வகையில் மோதல் ஏற்பட்டு நீதிமன்றத்தின் நேரம், பாராளுமன்றத்தின் நேரம் வீணாகிறது. மொழிகளின் இனிமையைப் போற்றும் மனோபாவத்தை உருவாக்க இலக்கிய மொழியாக்க முயற்சிகள் அதிகமாக வேண்டும்.

**ஆனந்த்**

## உலர் திராட்சையின் பயன்கள்!

* ரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு குறைவாக இருப்பவர்கள் உலர் திரட்சையை உட்கொண்டால் ரத்தசோகை குணமாகும். இதில் உள்ள தாமிரசத்துக்கள் ரத்தத்தில் சிவப்பணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.

*மஞ்சள் காமாலை நோய் உள்ளவர்கள் தினசரி இரு வேளை உலர் திராட்சையை சாப்பிட்டு வர காமாலை நோய் குணமடையும்.

*உலர் திராட்சைப் பழத்தில் 50 பழங்களை எடுத்து சுத்தம் செய்து பசுவின் பாலில் போட்டு காய்ச்சி ஆற வைத்து, பழத்தை சாப்பிட்டு விட்டு பாலை குடித்தால் காலையில் மலச்சிக்கல் பிரச்சினை சரியாகும்.

*இதில் உள்ள கால்சியம் சத்து எலும்பு மற்றும் பற்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

*குழந்தைக்கு பால் காய்ச்சும் போதும் அதில் இரண்டு பழத்தை உடைத்துப் போட்டு காய்ச்சிய பின் பாலை வடிகட்டிக் கொடுத்தால், தேக புஷ்டி உண்டாகும். குழந்தை திடமாக வளரும்.

*தொண்டைக்கட்டு பிரச்சினை இருந்தால் இரவு படுக்கும் முன் 20 உலர் திராட்சை பழங்களை சுத்தம் செய்து, பசும்பாலில் போட்டுக் காய்ச்சி, 10 வால்மிளகைத் தூள் செய்து கொஞ்சம் பனங்கற்கண்டு சேர்த்து கலக்கிக் குடித்தால் விரைவில் தகுந்த நிவாரணம் பெறலாம்.

*உலர் திராட்சைப் பழத்தை வெதுவெதுப்பான தண்ணீரில் 1/2 மணி நேரம் ஊறவைத்து காலையில் அருந்தினால் பெண்களின் மாதவிடாய்க் கோளாறுகள், இதய நோய் தீரும்.



## நடிகை ஹரிணி தன்னைப்பற்றி!

எனக்கு ரொம்பப் பிடிச்ச நடிகை ஆச்சி மனோரமா அவர்கள். என்னோட ரோல் மாடல் அவங்கதான். அவங்கள மாதிரி நான் அச்சீவ் பண்ணணும். என்னோட வாழ்க்கையில் மற்றுமொரு ஆசை என்னவென்றால் கவுண்டமணி சாரோடு நடிக்கணும். எனக்கு நடனம் ரொம்ப பிடிக்கும். நடனம் ஆடுறவங்களையும் ரொம்ப பிடிக்கும். நான் சொல் படத்தில் நடித்திருக்கிறேன். என்னை அறிமுகப்படுத்தியவர் திரு. பாவாணன் சார் அவர்கள். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# குழந்தைகளுக்குக் காலைச் சிற்றுண்டி அவசியமா?

இன்றைய அவசர உலகில் குழந்தைகள் சாப்பிட்டார்களா? இல்லையா? என்று அறிந்து கொள்ளக்கூட நமக்கு நேரமில்லை. காலையில் ஒவ்வொரு வீட்டிலும் ஏற்படும் பரபரப்பு, குழந்தைகளின் காலை உணவை மறக்கடிக்கச் செய்கிறது. குழந்தைகளை சீக்கிரம் பள்ளிக்கு அனுப்பிவிட்டு அவர்கள் கிளம்ப வேண்டும். குழந்தைகள் நன்றாக படிக்க வேண்டும் என்று விரும்புகிற பெற்றோர்கள், கண்டிப்பாக அவர்களுக்கு நல்ல காலை உணவை அவசியம் கொடுக்க வேண்டும்.

நாம் நீண்ட நேரம் உண்ணாத நிலையில் இரத்தச் சர்க்கரையின் அளவு குறைந்து விடும். அதனால் மூளையிலும் குளுக்கோஸ் அளவு குறைந்து, அதன் செயல்திறன் குறைந்து விடுகிறது. வெறும் வயிற்றோடு கற்க முற்படும்போது, கற்கும் திறன் மிகக் குறைவாகவே இருக்கும்.

நியூரான் செல்களின் செயல்பாடுகள் மிகுதியாகும் போது, இரத்தத்தில் இருந்து பெருமளவில் குளுக்கோஸ் உறிஞ்சப்படுவதால், அதை ஈடுசெய்யக் கூடுதலாக உண்ணவேண்டும். மூளையை எழுப்பி விரைந்து செயல்படச் செய்வதற்கு காலைச் சிற்றுண்டி, முக்கியமாக பள்ளி மாணவர்களுக்கு, ஓர் அருமையான வழி என்று ஆராய்ச்சியாளர்கள் வலியுறுத்துகின்றனர். ஆய்வுச் சான்றுகளால் மூளையின் செயல்பாடுகள் கல்வி கற்பது, கற்றதை நினைவில் கொள்வது சிறந்த மதிப்பெண்கள் பெறுவது. மனம் மற்றும் உடல்நலம் ஆகியவை காலைச் சிற்றுண்டியால் வளம் பெருகின்றன. ஓர் இரவு முழுவதும் உண்ணாமல் இருப்பதால், குளுக்கோஸ் பற்றாக்குறையில் இருக்கும் மூளைக்கு காலைச்சிற்றுண்டி குளுக்கோஸைக் கொடுத்துத் தட்டி எழுப்புகிறது. மேலும் தொடர்ந்து காலைச் சிற்றுண்டி உண்ணும் பழக்கத்தால். மூளையின் செயல்திறனை முடக்கும் ஊட்டச்சத்து பற்றாக்குறை நீங்கி மூளை இயல்பாகச் செயல்படும்.

மருத்துவர் மைக்கேல் மர்பி நடத்திய ஆய்வுகளில், காலைச் சிற்றுண்டி உண்ணும் மாணவர்கள் படிப்பில் சிறந்த முன்னேற்றம், சீரான நல்ல மனநிலை, நன்னடத்தை ஆகிய நன்மைகளைப் பெறுவதாகக் கண்டறிந்துள்ளார். இவர் நூற்றுக்கணக்கான மாணவர்களின் காலைச் சிற்றுண்டிப் பழக்கத்தால் ஏற்படும் பயனை ஆராய்ந்துள்ளார். காலைச் சிற்றுண்டி சரியாக உண்ணாதவர்களைவிட, நாளும் தவறாமல் காலைச் சிற்றுண்டி உண்ணும் மாணவர்கள் கணிதத்தில் 40% மதிப்பெண் கூடுதலாகப் பெறுவதாகவும், எல்லா நாளும் பள்ளி செல்லும் ஒழுங்குமுறை உள்ளவர்கள் என்றும் குறிப்பிடுகிறார். காலைச் சிற்றுண்டி உண்ணாத மாணவர்களுக்கு, உண்பவர்களைவிட மனத்தளர்ச்சி ஏற்படும் வாய்ப்பு 2 மடங்கு அதிகம் என்றும், மனப்பதுட்டம் முதலிய குறைபாடுகள் 4 மடங்கு அதிகம் என்றும் கண்டறிந்துள்ளார்.

மேலும் நல்ல ஊட்டச்சத்து உண்டு வளரும் 9 முதல் 11 வயது வரையிலான குழந்தைகளில் காலைச் சிற்றுண்டி உண்பவர்கள், உண்ணாதவர்களைவிட கற்கும் திறன் மிக்கவர்களாக இருந்தனர். மிகத் தாழ்ந்த நிலையில் இருந்த மாணவர்கள் கூட, காலைச் சிற்றுண்டிப் பழக்கத்தால் கல்வி கற்பதில் திறமையோடு காணப்பட்டனர்.

பள்ளி மாணவர்களைப் போலவே வளர்ந்தவர்கள் இரத்த குளுக்கோஸ் அளவையும் காலைச் சிற்றுண்டி உயர்த்துகிறது. அதனால் அவர்கள் கல்வித்திறனும், நினைவாற்றல் திறனும் உயர்ந்து காணப்படுகிறது.

இங்கிலாந்து நாட்டு ஆராய்ச்சியாளர் கண்டறிந்த உண்மை யாதெனில், பல்கலைக்கழக மாணவர்கள் 33 பேரில், காலைச் சிற்றுண்டி உண்பவர்களின் இரத்த குளுக்கோஸ் அளவு கூடுதலாக இருந்தது. அவர்களிடம் விரைவாக நினைவு கூரும் திறன் கூடுதலாகக் காணப்பட்டது. கூடுதல் இரத்த குளுக்கோஸ் காரணமாக, தேர்வுகளில் நுட்பமாகவும் பிழையில்லாமலும் விடை எழுதினர். நினைவாற்றல் செயல்பாடுகள் கூடியதே இதற்குக் காரணமாகும்.

**வெற்றிவேந்தன்.** ◆

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**


FINEST★MADE
INEGO DENIM
DENIM GOODS & SUPPLIES
Shop Online at:
MYNTRA.com
JABONG.COM
flipkart.com
snapdeal.com

MUTRAM - Tamil & English Monhtly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month

